
அக்ஷயாவின்
அழகிய
நந்தினி
₹ 10
பெண்கள் மாத இதழ்



# கண்ணும் கண்ணும் கலந்து...

அகிலா கோவிந்த்

# கண்ணும் கண்ணும் கலந்து...



அம்மா! என்று அழைத்தபடிவேகமாக அருகில் வந்த மகளை, மைத்ரேயி சற்று ஆச்சரியத்துடனேயே நிமிர்ந்து நோக்கினாள்.

புன்னகையின் சாயலோடு பளிரிடும் நிர்மலாவின் முகத்தில் இயல்புக்கு மாறாக சிறிதும் பெரிதுமாய் குழப்ப ரேகைகள்.

என்னடாம்மா? என்று பரிவுடன் மெல்லிய குரலில் வினவிய தாயின் கையில் இரண்டு துண்டுச் சீட்டுக்களை வைத்தாள் மகள். அம்மா, இனி முடிவு உங்கள் கையில் தான்.

---

## அகிலா கோவிந்த்

நான் வேலைக்குப் போவதா? இல்லை வெளிநீர் சென்று மேற்படிப்பை தொடர்வதா என முடிவெடுக்க வேண்டியது நீங்கள் தான். இந்த இரண்டு துண்டுச் சீட்டுக்களில் கண்ணை மூடிக் கொண்டு ஒன்றை எடுத்துக் கொடுங்கள். அது எப்படி வருகிறதோ அதுப்படி நடக்கப் போகிறேன்.... பெரிய பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்ட ஆறுதல் பெருமூச்சுடன் உரைத்தாள் நிர்மலா.

நிர்மலாவின் மெல்லிதழ்களில் இருந்து வந்த வேக வேகமான வார்த்தைகளில் அரண்டுதான் போய்விட்டாள் மைத்தேயி. அதைவிட முடிவெடுக்கும் மொத்தப் பொறுப்பையும் நிர்மலா தன் தலைமேல் கட்டிவிட்டது அவளை மிரளச் செய்தது.

என்ன கண்ணு.... இது...? நீயே ஏதாவது யோசித்து நல்ல முடிவெடுத்து... என்று தயங்கிய குரலில் ஆரம்பித்த மைத்தேயின் இரு தோள்களையும் அப்படியே கட்டிக் கொண்டு சிறு குழந்தை போல் தாயின் முதுகில் முகம் பதித்தவள், அந்த சாக்கு போக்கெல்லாம் வேண்டாம். நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும். நாளை அப்படி நீங்கள் எடுத்த முடிவினால் எனக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டாலும் பழி முழுவதையும் உங்கள் மேல் காட்ட எனக்கு வசதியாகவும் இருக்கும்.... நகையொலிப் பொங்க கேலியாய் சொல்ல ஆரம்பித்த நிர்மலா தாய் மைத்தேயின் நிஜமாகவே துனுக்குற்றுப் போன முகத்தைப் பார்த்து மேலும் கலகலவென நகைக்க ஆரம்பித்தாள்.

ஐயோ... அம்மா! ஒரேடியாய் பயந்து விட்டீர்களா? மேலும் நகைத்தவள் சட்டென மைத்தேயின் முன் வந்து அவளது கவலைப் படர்ந்த முகத்தை நிமிர்த்தினாள்.

அம்மா உங்களைப் பற்றித் தெரியாதா? சும்மா விளையாட்டுக்காக உங்களைப் பயங்காட்டத்தான் அப்படிச் சொன்னேன். தைரியமாய் ஒரு சீட்டை எடுங்கள். சீக்கிரமாய் அப்பா வருவதற்குள் நாம் ஒரு முடிவை எடுத்து விடுவோம்...! மறுபடியும் பிடிவாதமாய் தன் கைகளில் இருந்த இரண்டு துண்டுச் சீட்டுக்களைக் காட்டி நிர்மலா கெஞ்சத்தான் செய்தாள்.



மைத்தேயிக்குச் செல்ல மகளின் பிடிவாதம் பற்றி தெரிந்ததுதான். ஆனால், துண்டுச் சீட்டை எடுத்து நாம் ஒரு முடிவைச் சொன்னால்... மகளுக்க அது பிடிக்காத, விரும்பத் தகாத முடிவாய் அமைந்து விட்டால்... அவள் மனம் கோணி விடுமே என்ற பயமும் அவளை வாட்ட.... சட்டென தோன்றிய யோசனையுடன் நிமிர்ந்தாள்.

நிர்மலா, நான் துண்டுச் சீட்டை எடுக்கிறேன். அதற்கு முன் நீ என் காதில் உன்னுடைய அபிப்ராயம் என்ன என்பதை ரகசியமாய் சொல்லிவிடு.... என மைத்ரேயி காதுகளில் கிசுகிசுத்தபோது தாயின் சமயோசித அறிவைக் கண்டு நிர்மலா வியக்கத்தான் செய்தாள்.

ஆயிற்று. நிர்மலா மைத்ரேயின் காதுகளில் தனது அபிப்பிராயத்தைச் சொல்லவும், பயம் பொங்க இரண்டு துண்டுச் சீட்டுக்களில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள் மைத்ரேயி. அந்தச் சீட்டைப் பிடுங்காத குறையாய் பறித்து ஆவலாய் பிரித்து நிர்மலா மறுகணமே துள்ளிக் குதிக்க ஆரம்பித்தாள்.

அம்மா, நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்! உங்கள் முடிவும் என் முடிவும் ஒன்றுதான். இனி நான் வெளிநீர் சென்று மேற்படிப்பு படிக்கப் போவதில்லை. அப்பாவின் நண்பர் வைத்திருக்கும் கம்பெனியில் வேலைக்குச் செல்லப் போகிறேன்....

பெரும் அறிவிப்பு செய்தபடி தன்னை கட்டிக்கொண்டு கன்னங்களில் இதழ்களைப் பதித்த செல்ல மகளை நீண்ட பாரம்இறங்கிய நிம்மதி பெருமூச்சுடன் பார்த்தாள் மைத்ரேயி.

அதற்குள் காலை வாக்கிங் சென்றிருந்த தந்தை சுந்தரம் திரும்பி விட்டார். தாயும் மகளுமாய் கழுத்தை கட்டிக் கொண்டு பேசுவதும் சிரிப்பதுமாக பார்த்த அவருக்கு ஆவல் கூடியது.

என்ன சமாச்சாரம்? என்னையும் சிரிக்க வைக்கக் கூடாதா? என்றபடி நிர்மலாவின் கன்னங்களில் லேசாக தட்டி எதிர் சோபாவிலே உட்கார்ந்து விட்டார் சுந்தரம்.

உங்கள் செல்ல மகள் முடிவெடுத்து விட்டாள். இனி மேல்

படிப்பு வேண்டாமாம். நீங்கள் விரும்பியபடியே வேலைக்குச் செல்லப் போகிறாளாம் என்றாள் முகம் மலர.

அப்படியா? என நிஜமாகவே சந்தோஷத்தில் வியந்தார் சுந்தரம்.

சபாஷ்டா நிம்மி. நல்ல முடிவெடுத்தாய். மேற்படிப்பிற்கு வெளிநீருக்கு அனுப்பி நிஜமாகவே உன்னைப் பிரிய வேண்டியிருக்குமோ? என பயந்து கொண்டிருந்தேன். தன் உண்மையான கவலையை வெளிப்படுத்தியபோது தந்தையின் உள்ளூர அன்பை எண்ணி மகிழத்தான் செய்தாள் நிர்மலா.

அதற்குப் பின்னும் நிர்மலாவிற்கு அவசரம் குறைந்த பாடில்லை. அதே பரபரப்புடன் தனக்கு வேலை தருவதாகச் சொன்ன கம்பெனி பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்.

சுந்தரம் நெற்றி சுருங்கியவர், ஓ.... அதுவா....? அது எம்.ஜே.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிம்மி. நகரின் கட்டுமானத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரிய கம்பெனி பிளாட்ப்ரமோட்டர்ஸ், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், அடுக்கு மாடி கட்டிடங்கள் என நகரின் பலதரப்பட்ட ப்ராஜெக்ட்களை வெற்றிகரமாய் செய்து நல்ல பெயரைப் பெற்றிருக்கிறார்கள். அதன் முதலாளியாய் இருக்கும் சத்யன் என் பழைய பள்ளி மாணவன். ஓல்டு ஸ்டூடண்ட் அவனிடம் பேச்சு வாக்கில் நீ பி.ஆர்க். டிகிரி படித்து முடித்திருப்பதைச் சொன்னபோது, பி.ஆர்க் முடித்திருக்கிறாரா? அப்படியானால் நமக்குத் தேவையானவராயிற்றே! விருப்பப்பட்டால் நம் கம்பெனியிலே வேலை பார்க்கலாமே? என்று பட்டென சொல்லிவிட்டான்.

அதற்குப் பின் நடந்ததுதான் உனக்குத் தெரியுமே. நான் விஷயத்தை உன்னிடம் சொல்ல... எம்.ஆர்க். மேல் படிப்பு படிக்கலாமா வேண்டாமா என்ற குழப்பத்திலிருந்த நீ மேலும் குழம்பி.... தெளிவான ஒரு முடிவும் எடுத்துவிட்டாய். அதுபோதும் எனக்கு. இன்றே சத்யனுக்கு போன் செய்து தகவல் சொல்லி விடுகிறேன். ஓ.கே.யா நிம்மி?

தந்தை கேட்டபோது, பலமாய் தலையசைத்தாள் நிர்மலா.



ஆனால்..... நாளை நான் சந்திக்கப் போகும் சத்யனால் தன் வாழ:க்கையில் பெரும் புயலே வீசப்போகிறது என்பதை நிர்மலா அப்போது உணரவில்லை.



## 2



மறுநாள் எம்.ஜே. கன்ட்ரக்ஷனுக்கு தந்தையுடன் சென்ற நிர்மலா அலுவலகத்தைப் பார்த்து பிரமிக்கத்தான் செய்தாள். மார்பில் பளபளப்பில் அவள் இதுவரை பார்த்திராத நவீன வடிவமைப்புடன் கட்டிட முகப்பு இருந்தது. உள்ளே ரிசப்ஷனைத் தாண்டி பெரிய ஹால். கூடவே சிறு தடுப்புடன் அலுவலக அறைகள். எல்லாமே சுகந்தமான பர்ப்யூம் வாசனையுடன் குளிரூட்டப் பட்டிருந்தது.

ரிசப்ஷனில் அவர்கள் வந்தது தெரிந்ததுமே தனது எம்.டி.ரூமிலிருந்து வெளிவ்நத அவர்களை வரவேற்க வந்து விட்டான் சத்யன். சாதாண பள்ளி வாத்தியார் என்று அலட்சியப்படுத்தாமல் தன்னை அவனது குருபோல் எண்ணி மதிப்புக் கொடுத்தது சுந்தரத்தையே மலைக்கத்தான் செய்தது.

வாருங்கள் சார்... என்றான் சத்யன் முகம் மலர வரவேற்றபடி புன்சிரிப்பு தவழ பவ்யமாய் கைகூப்பிய அவனை அப்போதுதான் முதன் முதலாய் கைகூப்பிய அவனை அப்போதுதான் முதன் முதலாய் பார்த்த நிர்மலாவும் பிரமித்தாள். அவ்வளவு பெரிய கம்பெனியின் நிர்வாகியாய் இருப்பவன் எவ்வித பணக்காரத் தனமும் இல்லாமல் அமைதி தவழ இருந்தது அவளை ஆச்சரியப்படுத்தியது.

இது நிர்மலா.... நான் சொன்னேனே பி.ஆர்க் படித்திருக்கும் என்னுடைய மகள் உன்னுடைய கம்பெனியில் வேலை தேடி வந்திருக்கிறாள்... என்று சுந்தரம் அறிமுகப்படுத்தியதும் அதே பவ்யத்துடன் அவளுக்கும் கை கூப்பி வணக்கம் சொன்னான்.

வாருங்கள் உட்கார்ந்து பேசுவோம் என்றபடி தனது கேபினுக்கு

அவன் அழைத்துச் சென்றபோது நிர்மலாவின் மை விழிகள்
அவனையே ஒரு கணம் ஆழமாய் நோட்டமிட்டன.

சத்யனுக்கு நெடுநெடுவென உயரம். சுருளான முடிதவழும்
பரந்த நெற்றி. கூரான மூக்கு, முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை.
இறுக்கம் தளர்ந்து வரிசைப் பற்கள் பளீரிடும் புன்னகை. காந்தமான
கண் பார்வை. நடை உடை பாவனையில் ஒருவித வசீகரத் தன்மை
எல்லாமே நிர்மலாவை பிரமிக்கத்தான் செய்தது.

ரொம்பவும் சந்தோஷம். என் வார்த்தைக்கு மதிப்பளித்து
வேலைக்கு வந்திருக்கிறீர்கள் என இருவரையும் பார்த்து சத்யன்
சொன்னபோது நிர்மலா திணறத்தான் செய்தாள்.

கோடி கோடியாய் முதலீடு செய்து தொழில் நடத்தும்
கம்பெனியில் வேலை கிடைக்க அவனல்லவா கொடுத்து
வைத்திருக்க வேண்டும்? எவ்வளவு எளிமையாய் பேசுகிறான். ஒரு
வேளை.... இது தூண்டிலாய் இருக்குமோ? இவ்வளவு பெரிய
முதலாளியாய் இரப்பவன் வெறும் பசப்பு வார்த்தைகளை வீசி வேலை
வாங்குவதில் கில்லாடியாய் இருக்கக் கூடும்! ஆனால், அவள்
நினைப்பை பொய்யாக்கும்படி சத்யனின் அடுத்த கேள்வி
அமைந்தது.

உங்களுக்கு, மாஸ்டர் ஆஃப் ஆர்க்கிடெக்ட் மேற்படிப்பு
படிக்க ரொம்ப ஆசை என்று தந்தை கூறினார்கள். அது
உண்மைதானே நிர்மலா?

நிர்மலா ஆமோதிப்பவளாய் தலையசைத்தாள்.

அப்படியானால், நீங்கள் தாராளமாகப் படிக்கலாம். இங்கு வே
பார்த்துக் கொண்டே படிக்கலாம்... என்றான் சத்யன் புதிர் போடுவது
போல்.

வேலை பார்த்துக் கொண்டு.... படிக்கலாமா? நிர்மலா
புரியாதவளாய் விழிக்க ஆரம்பித்தாள்.

நிர்மலா, பெங்களூர் யுனிவர்சிட்டி ஒன்றில் எம். ஆர்க்.
படிப்பை தபால் மூலம் கற்றுக் கொடுக்கிறார்கள். அந்தக் கோர்ஸில்



நீங்கள் சேர்ந்து கொண்டால் இரண்டே வருடத்தில் படிப்பை முடித்து
விடலாம். படிப்பிற்கான செலவு முழுவதையும் கம்பெனியே ஏற்றுக்
கொள்ளும்.... என்று சத்யன் சொன்னபோது நிர்மலா அதிரத்தான்
செய்தாள்.

எத்தனை முறை மேற்படிப்பு படிக்கவா அல்லது வேலைக்குப்
போகவா....? என்று மண்டையைப் பிடித்து குடைந்தாள். குழம்பித்
தவித்தாள். ஒரு கணமாவது இப்படி போஸ்டலில்
படிப்பைத்தொடரலாம் என்ற சிந்தனை அவளுக்கு
உரைக்கவில்லையே! தன்னைத் தானே நொந்து கொண்டு
சந்தோஷமாய் தலையசைத்தாள். அதைவிட சத்யன் நெடுநாள்
பழகியது போல் அவள் பெயரை விளித்து இயல்பாய் பேசியது
அவளுக்கப் பிடித்திருந்தது.

சுந்தரத்திற்கும் இரண்டு மடங்கு சந்தோஷம்தான். நிர்மலா
ஆசைப்பட்டது போல் மேல் படிப்பும் தொடரப் போவது அவருக்கு
பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

ரொம்பவும்நன்றி சத்யன். உன் மூலம் இவ்வளவு பெரிய உதவி
கிடைக்குமென நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என குரல்
தழும்ப சுந்தரம் சொன்ன போது சத்யன் பெரிய ஹாஸ்யம் கண்டது
போல் சிரிக்கத் தான் செய்தான்.

ஐயோ... என்ன ஸார் இது? சொல்லப் போனால் இது உதவியே
அல்ல. என் கம்பெனிக்கு நிர்மலா போன்ற திறமைசாலிகள்
எப்போதும் தேவை. அதற்காக என்ன விலை கொடுத்தாவது நான்
வாங்கிக் கொள்வேன்... என்றான் சிரிப்பு மாறாமல்.

இம்முறை நிர்மலாவும் சிரிக்கத்தான் செய்தாள். ஆனால்,
உள்ளூர, இவன் பேச்சில் சமர்த்தன். பேசியே ஆளைக் கவிழ்த்து
விடுவான் என்பது அவளுக்கு உரைக்கத்தான் செய்தது.

ஆயிற்று. அதன் பின் சத்யன் அவள் வேலைக்குச்
சேருவதற்கான ஃபார்மல் பேப்பர்களில் கையெழுத்து வாங்கிக்
கொண்டான். மறுநாள் முதல் வேலைக்கு வருவதற்கான

அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரையும் நீட்டினான். அதில் குறிப்பிட்டிருந்த அவளது தகுதிக்கு அதிகமான சம்பளத்தைப் பார்த்தபோது நிர்மலாவுக்கு மயக்கம் வரும் போல் தான் இருந்தது.

ஆனால், இது எது பற்றியும் கவலைப்படாதவனாய் சத்யன் அவளுக்கு கொடுக்க இருக்கும் ஆர்க்கிடெக்ட் பிராஜெக்டைப் பற்றி விளக்க ஆரம்பித்து விட்டான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கம்பெனியைப் பற்றி, அதன் அசுரத்தனமான வளர்ச்சி பற்றி, மற்ற நிறுவனங்களுடன்போட்டி போட்டு செயல்பட வேண்டிய அவசியம் பற்றி... விலாவாரியாய் சத்யன் விளக்கினான்.

அழகான அமர்ந்த குரலில் அவன் பேசுவதைக் கண் இமைக்காமல் கேட்டுக் கொண்டாள் நிர்மலா.

கடைசியில் மறுநாள் வேலைக்கு வரும்படி விடைகொடுத்து சத்யன் அவர்களை அனுப்பினான்.

சுந்தரமும் நிர்மலாவும் வணக்கம் சொல்லி விடைபெற்று வெளிவந்தனர்.

சுந்தரம் வெளிவந்ததும், என்ன நிர்மலா திருப்தி தானா? வேலை பிடித்திருக்கிறதா? என்றார் ஆவலோடு.

ரொம்பவும் பிடித்திருக்கிறதப்பா... என்றாள் நிர்மலா அழுத்தந் திருத்தமான குரலில்.

அவள் சொன்னது வேலையை மட்டுமல்ல; சத்யனையும்சேர்த்துதான் என்பது அன்று இரவுதான் அவளுக்கே புரிந்தது.



## 3

அன்று இரவு வெகு நேரமாகியும் தூக்கம் வந்தபாடில்லை நிர்மலாவுக்கு. சாதாரண நாட்களில் படுத்ததும் முருகா சரணம்



சொல்லிவிட்டு கண்களை மூடினால் ஐந்தே நிமிடங்களில் தூங்கி விடுவது அவளது வழக்கம். இன்று என்ன நேர்ந்தது?

மனம் ரிவைண்ட் வைத்தது போல் காலைச் சம்பவங்களில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. இன்று சந்தித்த சத்யன் அவளைப் பாடாய் படுத்திக் கொண்டிருந்தான்.

கல்லூரி நாட்களிலும் சரி, வெளியே செல்லும் சமயங்களிலும் சரி, எத்தனை ஆண்களை அவள் சந்தித்திருக்கிறாள்? எத்தனை பேர் அசடு வழிய அவளிடம் வழிசலாய் பேச முயற்சித்திருக்கிறார்கள்?

கல்லூரியில் தோழிகள் கிண்டல் செய்வது அவள் ஞாபகத்தில் ஓடியது. யார் கூட வேண்டுமானாலும் வெளியே போகலாம். ஆனா, நம்ம நிர்மலா கூட மட்டும்போகக் கூடாது. நிர்மலாவோட அபரிதமான அழகு முன்னாடி ஒரு பயல் நம்மை திரும்பிப் பார்க்க மாட்டான். நிர்மலாவின் பளிரிடும் தங்க நிற அழகை வஞ்சப் புகழ்ச்சியாய் தோழிகள் சொல்வத நூற்றுக்கு நூறு உண்மை என சமயத்தில் நேரிடையாகவே அவள் உணர்ந்திருந்தாள். எதிர்ப்படும் ஆண்கள் வயது வித்தியாசம் இல்லாமல் அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்துச் சொல்வது சில நேரங்களில் அவளை எரிச்சலடையச் செய்வதும் உண்டு. அதிலும் சிலர் வெறித்தபடி, கள்ளத் தனமாய் அடிக்கடி பார்ப்பது அவளை ரொம்பவும் எரிச்சல் படுத்தும்.

ஆனால்... இன்று ஏற்பட்ட அனுபவம் நிர்மலாவுக்கு முற்றிலும் புதியது. சத்யன் முதன் முதலாய் அவளை அறிமுகப் பார்வை பார்த்ததோடு சரி. அவள் பக்கம் திரும்பவே இல்லை. எந்தவித சலனமும் இல்லாமல் தந்தையுடன் இயல்பாய் பேசினான். தேவைப்படும்போது மட்டும்தான் அவள்புறம்திரும்பினான் எந்தவித ஒளிவுப் பார்வையும் இன்றி நேருக்கு நேர் கண்களைப் பார்த்து கேள்விகளைக்கேட்டான்.

மற்ற சராசரி ஆண்ககளைவிட சத்யன்அப்படி மாறுபட்டு நடந்து கொண்டது நிர்மலாவுக்கு அதுவரை ஏற்பட்டிராத புதிய அனுபவத்தைத் தந்தது. அவன் தன்னை அடிக்கடி மற்ற ஆண்கள் போல் பார்க்கவில்லை என்பது தெரிந்ததும் அவனையே அவள்

நைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. நிர்மலாவா.... நிர்மலாவா... இப்படிப் பார்ப்பது? என நம்ப முடியாமல் அவளுக்கு ஆச்சரியப்படுத்தியது.

அந்தக் கணம் நிர்மலாவுக்கு சங்க நூல் ஒன்றில் படித்த சுயம்வ சம்பவம் நினைவுக்கு வந்தது.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் ஒரே மகளான அழகுப் பதுமை திலோத்தமை! அவளுக்கு அழகு என்றால்அப்படியொரு அழகு, தங்கச்சிலை போல் கிறங்கடிக்கும் அழகு. அவளுக்கு சுயம்வர விழா நடத்த ஏற்பாடு செய்தான் பாண்டிய மன்னன்.

திலோத்தமைக்கு சுயம்வர விழா என்று கேள்விப் பட்டதும் பக்கத்து குறுநில மன்னர்களுக்கு, பட்டத்து இளவரசர்களுக்கு தூக்கம் போயிற்று. போட்டி நாளை எதிர்பார்த்து ஆவலோடு விழாவில் வந்து கலந்து கொண்டார்கள்.

பெரிய மண்டபத்தில் சுயம்வர விழா நடக்கிறது. வரிசையாய் இருபுறமாய் கம்பீரத்துடன் மன்னர்கள் வீற்றிருக்க... நடுவே சுயம்வர மாலையைப் பிடித்தபடி அழகுச் சிலையாய் திலோத்தமை நடந்து வருகிறாள். அவளின் கண்ணைப் பறிக்கும் தங்க நிற அழகில் ஏக்கமாய் அவளையே விழுங்குவது போல் பார்த்தபடி எல்லோரும் வீற்றிருக்க...ஒரே ஒருவன்மட்டும் திலோத்தமை பக்கம் திரும்பாமல், கம்பீரமாய் அவன் முகம் வைத்திருந்த திசையையே பார்த்துக் கொண்டிருந்தானாம். திலோத்தமை நடந்துவந்தவள் அதைப்பார்த்தவள் டக்கென நின்று அவனையே கண் கொட்டாமல் பார்த்தாளாம். மறு பேச்சின்றி அவனுக்கு மாலையிட்டாளாம்.

சங்க காலத்தையே யோசித்துப் பார்த்துச் சிரிப்பில் மூழ்கிய நிர்மலா மறுகணமே மனம் போகிற போக்கை நினைத்துத் திடுக்கிட்டாள். என்ன இது திலோத்தமையும் நானும் ஒன்றா?மற்ற ஆண்கள் போல் பார்த்து அசடு வழியவில்லை என்பதற்காக மாலையிட்டு விடுவேன்? அல்லது....இன்று என்ன சுயம்வர விழாவா நடந்திருக்கிறது?அதற்குள் புத்தி ஏன் தறிகெட்டுப் போகிறது?



தன்னைத்தானே நொந்துகொண்டு மனதை ஒரு நிலைப்படுத்தி தூங்க முயற்சித்தாள். ரொம்ப நேரப் போராட்டத்திற்குப் பின் அவளையறியாமல் தூங்கியும் போனாள்.

மறுநாள்❒

விடிந்ததும் அதே பரபரப்புடன் உற்சாகமாய் வேலைக்காக் கிளம்பி விட்டாள் நிர்மலா. சுந்தரமும் மைத்ரேயியும் சந்தோஷமாய் அவளை வாழ்த்தி அனுப்ப குதிபோடும் உள்ளத்தோடுதான்சென்றாள்.

சரியாக ஒன்பது மணிக்கு,எம்.ஜே.கன்ஸ்ட்ரக்ஷன் அலுவலகத்திற்குள் நுழைந்தாள். அவளுக்கு முன்பாகவே, சத்யன் வந்து அவன் அறையில் வேலை செய்து கொண்டிருப்பான் போலும். நிர்மலா ஹாண்ட் பேக்கை அருகில் வைத்துவிட்டு இருக்கைக்காக திரும்பும்போது ஆபீஸ் பையன்வந்து, மேடம், நீங்கள் வந்ததும் அறைக்கு அழைத்து வரும்படி எம்.டி.ஐயா சொன்னாங்க... என்று அறிவித்தான்.

மறு பேச்சில்லாமல் அவன் பின்னால் நடந்தாள் நிர்மலா.

ஆபீஸ் பையனிடம் பேச்சுக் கொடுத்ததில் சத்யன் அன்று ஆறு மணிக்கே வேலைக்கு வந்து விட்டது அவளுக்குப் புரிந்தது. பணத்தைச் சம்பாதிப்பதும் அதைத் தக்க வைத்துக் கொள்வதும் பெரும்பாடுதான். அதற்காக கோடீஸ்வரர்கள் ஆனாலும், நேரம் காலம் பார்க்காமல் உழைத்துதான் தீர வேண்டும் போலும்... எண்ணமிட்டபடி சென்றுஅறைக்கதவை திறந்தவளுக்கு, அவளைப் பார்த்ததும் அழகாக முறுவலித்து, சத்யன். வெல்கம்.... சொன்னதும் எல்லாம் மறந்து போயிற்று.

கையில் பார்த்துக் கொண்டிருந்த கடிதங்களை மூடி வைத்து விட்டு எழுந்தவன், போகலாமா? என்று அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

எல்லாரும் வரும் முன் நம் அலுவலகம், டிசைனிங் ரூம்,ப்ளானிங் ப்ரொஜக்ஷன் ரூம் என எல்லா பிரிவுகளையும் பார்த்து விடுவோம். அப்போதுதான் நம் கம்பேனி பற்றிய முழு

விவரங்களையும் அறிந்து கொள்ள முடியும். என்றபடி அவளை டிசைனிங் ரூம் பகுதிக்கு அழைத்துச் சென்றான் சத்யன்.

பெரிய கட்டிடத்டதின் முதல் தளம் முழுவதும் அந்த டிசைனிங் வேலைக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. பெரிய பெரிய சார்ட்கள், சிறு மினயேச்சர் சைஸில் விதவிதமான கட்டிட அமைப்புகள் மாடுலேஷன்கள், ப்ரொஜக்ஷன் வசதியுடன் கூடிய கம்ப்யூட்டர் டெர்மினல்கள் என எல்லாவற்றையும் விலாவாரியாய் சத்யன் விளக்கிக்காட்ட... பார்க்கும்போதே நிர்மலாவுக்கு கை ஊறி பரபரத்தது.

இதுதானே அவளது கனவு. இப்படி ஒரு டிசைனிங் ரூமை சகல வசதிகளுடன் அமைத்துக் கொண்டு விதவிதமான கட்டிட அமைப்புகளை ஸ்கெட்ச் டிசைனிங் செய்யத்தானே அவள் துடித்துக் கொண்டிருந்தாள்...!

அவள் எண்ணமிடும்போதே.. இதே போலத்தான் அடுத்த தளத்தில் உங்களுக்கு ஓர் அறை தயார் செய்திருக்கிறோம். முழு சுதந்திரத்தோடு அதை நீங்கள் பயன்படுத்தலாம்... என்று முத்தாய்ப்பாய் சத்யன் சொன்னபோது கொண்டிருக்கும் சென்ட்ரல் ஏசியை மீறி அவளுக்கு குளிரத்தான் செய்தது.

படிப்படியாக சத்யன் அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் விளக்கினான். கடைசியாக ஆர் அண்ட் டி டிபார்ட்மெண்டுக்கு கொண்டு வந்து நிறுத்தினான். நிர்மலா இதுதான் ஆர் ஆண்ட் டி பகுதி. அதாவது ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட். நம் கம்பெனி நடவடிக்கைகளை ஆராய்வதும் கம்பெனி முன்னேற்றத்திற்காக திட்டமிடுவதும் இதன் முக்கிய வேலை. இது முழுக்க என்னுடைய மேற்பார்வையில்தான், நிர்மலா, உங்கள் வேலை ஸ்கெட்ச் டிசைனிங் செய்வது மட்டுமல்ல. நாளின் பிற்பகுதி வேலை நேரத்தில் இந்த ஆர் அண்ட் டி டிபார்ட்மெண்டில் செலவிட்டு கம்பெனியின் வளர்ச்சிக்காக திட்டமிடுவது கூடத்தான்... என்பது மூளைக்கு உரைத்துஇனம் புரியா பரபரப்பு உண்டாகியது. அது அவளை திடுக்கிடவும் செய்தது.

அதன் பின் அலுவலக ஸ்டாஃப்களிடம் சத்யன் நிர்மலாவை



அறிமுகப்படுத்தி வைத்தான். குறுகுறப்போடு அவளைப் பார்த்து வணக்கம் சொன்னவர்களிடம் பதிலுக்கு புன்னகை ததும்ப வணக்கமிட்டாள் நிர்மலா.

ஆயிற்று. ஒரு வழியாய் அறிமுகப்படலம் எல்லாம் முடிந்து தன் சீட்டிற்கு வந்து அமர்ந்தாள் நிர்மலா. அவளுக்க உதவியாய் இருவர் அமர்த்தப்பட்டனர். அவள் விரும்புகிற ஸ்கெட்சை உடனுக்குடன் ப்ளான் செய்யும் டிசைனரும், முக்கியமான டிசைன்களை உடன் கம்ப்யூட்டர் ப்ளாப்பியில் பதிவு செய்யும் கம்ப்யூட்டர் ப்ராக்ராமரும், ஆக இருவர். இருவருமே நிர்மலா வயதை ஒத்த பெண்கள் ஆனதால் நிர்மலாவுக்கு அவர்களுடன் பழகுவது எளிதாயிற்று.

நிர்மலா அன்போடு அவர்களிடம் பேசி விசாரித்தாள். ஒருத்தி கவிதா, மற்றவள் மல்லிகா. இருவருமே ப்ளஸ் டூ முடித்த கையோடு வீட்டு சூழ்நிலை கருதி வேலைக்கு வந்து சேர்ந்தவர்கள். கம்பெனியே அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்து அந்தந்த பொறுப்பில் அமர்த்தியிருக்கிறது.

அவர்களுடன் பேசும்போது, எம்.டி. சத்யனை அவர்கள் குறிப்பிடும்போது, அவரா? ஒன் மேன் ஷோ! என்றதும் புரியாமல் தான் பார்த்தாள் நிர்மலா. உங்களுக்குத் தெரியாதா? கம்பெனி ஆரம்பித்தது முதல் இன்றைய அசுரத்தனமான வளர்ச்சி வரை எல்லாம் சத்யனுடைய முயற்சிதான்! கடும் உழைப்புதான்! என்று அவர்கள் விளக்கியபோது சத்யனின் மேலிருந்த மதிப்பு அவளுள் பன்மடங்கு உயர்ந்து விட்டது.

அன்றைய வேலையும் அவளுக்க எளிதாக இருந்து விட்டது. ஏற்கனவே ப்ளாப்பியில் இருந்த டிசைன்களில் இருந்து பத்துவித அழகான மாடல்களை செலக்ட் செய்யும் பொறுப்புதான். பன்னாட்டு விளம்பர நிறுவனம் ஒன்று நகரில் புதியதாய் அமைக்க இருக்கும் நிர்வாகக் கட்டிடத்திற்காக கட்டிட வடிவமைப்பு பற்றி ஸ்கெட்ச்சை கேட்டிருந்தது. அந்த பொறுப்பைத்தான் சத்யன் அவளிடம் முதல் வேலையாய் ஒப்படைத்திருந்தான்.

அதிர்ஷ்ட வசமாக நிர்மலா தேர்ந்தெடுத்துக் கொடுத்த

வடிவமைப்பு பன்னாட்டுக் கம்பெனிக்கு பிடித்துப் போய் அதன் பிரதிநிதி உடனே ஓ.கே. செய்துவிட்டார். நிர்மலா குதி போடாத குறையாய் சந்தோஷமடைந்தாள். விஷயம் கேள்விப்பட்டு ரூமை விட்டு வந்த சத்யன், முதல் வேலையிலேயே அசத்தி விட்டாய். பாராட்டுக்கள் என்ற படி அவள் கைகள் இரண்டையும் அழுந்தப் பிடித்துக் கொண்டான். அந்த ஸ்பரிசத்தில் கரண்ட் பாய்ந்தது போல் அசைவற்று அப்படியே நின்று விட்டாள் நிர்மலா.



# 4



சத்யன் நிர்மலாவின் கைகள் இரண்டையும் அழுந்தப் பிடித்தது சில கணங்கள் தான். அதன் பின் சத்யன் அவள் கைகளை விடுவித்து பாராட்டிவிட்டுச் சென்று விட்டான். ஆனால், அவளால் அவ்வளவு எளிதில் இயல்புக்கு திரும்ப முடியவில்லை.

அவன் சென்ற பிறகு ஓரிரு நிமிடங்கள் அதே நிலையில் அசைவற்று நின்று கொண்டிருந்தாள் நிர்மலா.

விரல்களின் சின்ன ஸ்பரிசம்தான். அதற்கு இப்படி.... இவ்வளவு சிலிர்த்துக் கொள்வானேன்? ஏன்... என்னாயிற்று எனக்கு?

தன்னைத்டதானே கேள்விகள் கேட்டுக் கொண்ட நிர்மலாவுக்கு அன்று இரவு வரை பதில் கிடைத்த பாடில்லை. அலுவலகம் முடிந்து வீடு திரும்பி தாய் தந்தையிடம் ஆரம்பித்த அலுவலக புராணத்தையும் அவள் நிறுத்தியபாடில்லை. திரும்பத் திடிரும்ப கம்பெனி பற்றி, சத்யனின் திறமை பற்றி வாய் அலுக்கும் வரை சொல்லி முடித்தாள்.

மறுநாள் விடிந்ததும் அதே அவசரத்துடன் குதிபோட்டுக் கொண்டுதான் அலுவலகத்திற்கு கிளம்பிப் போனாள். அன்றும் சத்யன் அவள் வருவதற்கு முன்னரே அலுவலகத்தில் இருந்தான். நிர்மலாவால் அடக்க முடியவில்லை. வழக்கம் போல கதவைத்



திறந்து குட்மார்னிங் சொன்னவள், ஸார், ஒன்று கேட்கலாமா? என்றாள் கெஞ்சும் குரலில்.

அவள் அப்படிக் கேட்டதும் முகம் நிமிர்த்து பார்த்தட சத்யன் மறுகணமே இறுக்கம் தளர்ந்து புன்னகைக்க ஆரம்பித்தான்.

தாராளமாய் கேட்கலாம்... என்று தன் முத்துப்பல் வரிசையைக் காட்டியதும் நிர்மலாவுக்கு தைரியம் வந்தது.

தினம் இவ்வளவு சீக்கிரம் வந்து வேலை பார்க்கிறீர்களே... இது அவசியமா ஸார்?

அவசியமா... என்றால்?

நீங்களே முதலாளி. பெரும் கோடீஸ்வரர். ஒன்றிற்கு இரண்டு ஆட்களை இன்னு வேலைக்கு வைத்துக் கொண்டால்... உங்கள் பணி சுலபமாகி விடும். இப்படி கிடந்து சங்கடப்பட வேண்டிய அவசியமில்லை...!

சொல்லி முடித்த நிர்மலாவை ஒரு கணம் கூர்ந்து பார்த்தான் சத்யன்.

நிர்மலா, எனது கம்பெனி சைக்காலஜியே தனி. நான் துடிப்பாய் பொறுப்போடு செயல்பட்டால்தான் என்னுடன் வேலை பார்க்கும் சக தோழர்களும் உற்சாகமாய் வேலை பார்ப்பார்கள் என்பது எனது தியரி. அது உண்மையென்றும் பல சமயங்களில் நான் உணர்ந்திருக்கிறேன். மேலும்...

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் உற்சாகம் தேவைப்படும். சிலருக்கு முதலாளி இப்படி அக்கறையாய் வேலை பார்ப்பதை பார்த்தே உற்சாகம் வந்துவிடும். இன்றும் சிலர்.... என்றவபடி சத்யன் நெற்றியைச் சுருக்கியவன். உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா? என்றான் அமர்ந்த குரலில்.

நிர்மலா புரியாமல் காது தொங்கட்டான்கள் அதிர தலை சாய்த்துப் பார்த்தாள்.

நம் ஹெட் கிளார்க் கல்பனா மேடமுக்கு ஐம்பத்தி ஆறு வயதாகி விட்டது. ஆனால், அவர்களுக்க மனதல் இன்னமும் சின்னப்

பெண் நினைப்புத்தான் இருக்கிறது. அதனாலேயே அவர்களை பார்க்கும் போதெல்லாம், இந்த ஸ்டைல் பிரமாதம்... என பொய்யாய் புகழ்வேன். அதை அப்படியே நம்பி விடும் கல்பனா மேடம். அதன் பிறகு வேலையில் காட்டும் உற்சாகம் இருக்கிறதே... அதை வார்த்தையால் சொல்ல முடியாது. அவ்வளவு உற்சாகம் இருக்கும்...

சத்யன் ரகசியம் என்று சொல்லிவிட்டு என்னவோ ஏதோ சொல்லப் போகிறான் என்று நினைத்தவளுக்கு அவன் சொன்னதைக் கேட்டதும் சப்பென்றாகி விட்டது. அதிலும் வேலையில் உற்சாகப்படுத்த இப்படியெல்லாமா ஒரு முதலாளி நாகமாடுவது என்ற கோபமும் வந்தது.

அவளுடைய முகக் குறிப்பை உணராத சத்யன், நிர்மலா எல்லோரையும் உற்சாகப்படுத்த வழி வைத்திருக்கிறேன். ஆனால், உன் விஷயத்தில்... நிறுத்தி விட்டு நிர்மலாவை கூர்ந்து பார்த்தான். அவளுள் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

ஆனால், சத்யன் நிதானமாக, இனி தான் அந்த வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்.. என்று முடிக்கவும் அவளுக்கு பெரும் நிம்மதி வெளிப்பட்டது, அதற்குப் பின் அங்கு நிற்கப் பிடிக்காமல் அவனிடம் விடைபெற்று சீட்டிற்குத் திரும்பினாள்.

அன்றைய பொழுது வேலையும் எளிதாகவே இருந்தது. சிறுசிறு மினியேச்சர் மாடல்களை உருவாக்கி ப்ளாப் ப்ரமோட்டர் ஒருவருக்குக் காட்ட வேண்டியிருந்தது. நிர்மலா படிக்கும் காலத்திலே டயரி ஒன்றில் தனக்கு அவ்வப்போது தோன்றும் வித்தியாசமான ஸ்கெட்ச் டிசைன்களை குறித்து வைப்பது வழக்கம்.

இம்முறை அந்த டயரியின் உதவியாலே பலவித மாடல் ஸ்கெட்சுகளை உடனுக்குடன் அவளால் உருவாக்க முடிந்தது. நிர்மலா செய்து காட்டிய மாடல் ஸ்கெட்சுகள் பிளாட் ப்ரமோட்டருக்கு பிடித்துப் போக அதில் ஒரு மாடலையே செலக்ட்டும் செய்து விட்டார்.

அன்று மதிய உணவிற்குப் பின் ஆர் ஆண்டு டி செக்ஷனில் தான் சத்யன் அவளுக்கு காட்சி தந்தான். ஒரு கையினால் செல்போனில்



பேசிக் கொண்டே மறுகணம் முன்னால் உள்ள கம்ப்யூட்டரின் கீ போர்டை இயக்கிக் கொண்டிருந்தான்.

எந்தவித களைப்புமில்லாமல் உற்சாகத்துடன் வேலை பார்க்கும் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள் நிர்மலா. இந்த அலுவலகத்தில் இவன் எத்தனை விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் ஒரே ஈடுபாட்டுடன் இவனால் எப்படிச் செய்ய முடிகிறது. அப்படிச் செய்வதனால்தான் கோடீஸ்வரனாக இவனால் இருக்க முடிகிறதோ?

யோசித்தபடி அவனையே பார்த்துக் கொண்டு சிலையாய் நின்ற நிர்மலாவிடம் என்ன என்பதுபோல் அவன் புருவம் உயர்த்தி வினவவும் அவளுக்கு வெட்கமாகிப் போயிற்று.

இருந்தும் நிலைமையை சமாளித்தவள், ஒன்று மில்லை ஸார். என்னுடைய டயரியில் கட்டிட அமைப்பிற்கான ஸ்கெட்சுகள் சிலவற்றை படிக்கும் காலத்திலிருந்தே குறித்து வந்திருக்கிறேன். அதை கொஞ்சம் பார்க்கிறீர்களா? என்றாள் குரல் கம்ம.

ஓ.... ஸ்கெட்ச் டிசைன்களா? நீ வரைந்தது தானே? உடனே பார்ப்போம்..! என்றபடி சத்யன் அவளிடமிருந்து டயரியை வாங்கிக் கொண்டான். பக்கத்திலிருந்து இருக்கையில் உட்காரச் சொல்லியபடி டயரியை ஆவலாய் புரட்ட ஆரம்பித்தான்.

அவனுக்கு வெகு அருகே இருந்த இருக்கையில் தயக்கமாய் அமர்ந்த நிர்மலா இப்போதுதான் முதல் முறையாய் அவனை நெருக்கமான சூழ்நிலையில் பார்க்கிறாள். நல்ல உயரத்துடன் உறுதியுடன் வனப்புமான அவனது உடற்கட்டு அவளை வியக்கச் செய்தது.

அவன் குனிந்திருந்ததால், அலையலையாய் பளபளத்தது அவனது அடர்ந்த சிகை... நிர்மலாவின் கைகள் பரபரத்து அதில் அலைய விடத் துடித்தது. என்ன ஒரு நினைப்பு தன்னைத்தானே கடிந்து குனிந்து கொண்டாள்.

மீண்டும் நிமிர்ந்தபோது அவளது கயல் விழிகள் அவனையே

விழுங்க விழுங்க பார்க்க ஆரம்பித்தது.

ஒரு கணம் அவளது நிலை இராமாயணத்தில் கம்பர் நட்சத்திரங்களை வருணித்த காட்சியை ஒத்திருந்தது.

தேவர்களின் அதிபதியான இந்திரன் கௌதம முனிவரின் மனைவியான அகலிகை மீது தீராத ஆசைவைத்தான். அவளை சமயம் பார்த்து வஞ்சித்து தனது ஆசையை நிறைவேற்றியும் கொண்டான்.

தனது மனைவியை இந்திரன் ஏமாற்றி புணர்ந்து விட்டதை அறிந்த கௌதம முனியவர் சினத்தோடு இந்திரனின் உடம்பு முழுவதும் கண்களா; மாறும்படி சாபமிட்டார். தேவர்களின் கண்கள் இமைத்தல் செய்யா. அது போல் உடல் முழுவதும் கண்கள் உள்ள இந்திரனும் கண்கள் இமைக்காது நட்சத்திரங்களைப் போல விழித்திருந்தானாம்.

நிர்மலாவும் ஏறக்குறைய அதே நிலையில் உடம்பு முழுவதும் கண்களைக் கொண்டவள் போல் சத்யனை விடாது பார்த்துக் கொண்டிருந்தாள்.

டக்கென ஏதோ ஓசை எழும்பி மூளையில் வார்த்தைகளாய் உரைத்தபோதுதான் அவளுக்க சுயநினைவே வந்தது. எதிரில் குறும்பு சிரித்தபடி சத்யன். அவள் விழுங்கு பார்வை பார்த்டததைக் கண்டு பிடித்து விட்டான். என்னவோ அவளிடம் கேட்டிருக்கிறான்.


என்ன கேட்டீர்கள் ஸார்? என்றாள் அவசரமாய் சூழ்நிலையை மாற்ற விரும்பியபடி.

உன் கவனம் எங்கோ போய் விட்டது. அப்படித் தானே? என சத்யன் வினவவும் பதில் சொல்ல முடியாமல் அப்படியே மருகத்தான் செய்தாள் நிர்மலா.

பின் சத்யனே அவள் முகம் நோக்கி குனிந்தான்

உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது... என்றான் தேன் தடவிய குரலில்





# 5

உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது... என்றான் சத்யன். அந்த வார்த்தைகள் நிர்மலாவை அப்படியே ஒரு ஆட்டு ஆட்டி விட்டது. அவள் இதயம் ஒரு நிமிடம் நின்று விட்டது என்று கூடச் சொல்லலாம்.

ஆனால், சத்யன் அத்தோடு வார்த்தைகளை நிறுத்தவில்லை.

உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. உன்னுடைய டயரியல் உள்ள ஸ்கெட்சுகளில் உன்னுடைய திறமை பளிச்சிடுகிறது. இவ்வளவு சின்ன வயதில் இப்படியொரு திறமை இருப்பது பெரும் ஆச்சரியம்தான்! என முடிக்கவும் அவளுள் இருந்த சந்தோஷக் காற்ற பலூனாய் இறங்கிப் போனது.

அவ்வளவுதானா? அவளது திறமைக்கான பாராட்டு தானா? அதைத்தான் பிடித்திருக்கிறது என்று சத்யன் சொல்கிறானா... அவளைப் பிடித்திருக்கிறது என்று சொல்லவில்லையா?

சந்று நேரம் நின்று போய் விட்ட இதயம், இரு மடங்கு வேகத்துடன் மீண்டும் துடிக்க ஆரம்பித்தது. தனத தடிப்பு, தவிப்பு எதையும் சத்யன் அறிந்துவிடக் கூடாது என்ற கவலையும் நிர்மலாவுக்கு. அந்டத இடத்தை விட்டு ஓடினால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டாள் அவள்.

ஒரு வழியாய் எழுந்து, பிளாட் ப்ரமோட்டருக்கான ஸ்கெட்சிங் வேலையில் கொஞ்சம் பெண்டிங் இருக்கிறது. முடித்துவிட்டு வந்து விடுகிறேன் சார்... என்று கூறியவாறு அவனது பதிலுக்குக் கூட காத்திராமல் அகன்றபோது ஒரு விசித்திர புன்முறுவலோடு அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் சத்யன்.

மீண்டும் தன் ரூமிற்கு வந்து ஸீட்டில் உட்கார்ந்த போதுதான் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள அவளால் முடிந்தது. ஓரளவு தன்னை சமாதானப்படுத்திக் கொண்ட பிறகு கேள்விகள் துளைத்தது.

பட்டிக்காடு மாதிரி அவள் அப்படி ஓடி வந்திருக்கக் கூடாதோ?எதையோ எதிர்பார்த்தவள் தனது எதிர்பார்ப்பு என்ன என்பதை அவள் புரிந்து கொள்ளகூடும் என்று தானே பயந்து விட்டாள்.

ஒருவேளை அப்படி அந்த சந்தர்ப்பத்தில் அவனுக்குப் புரிய வைத்தால் கூட நல்லதுதானே? என்ற யோசனையும் அவளை வாட்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாய் ஒரு வித தனிமை அவளுக்கு வேண்டியிருந்தது.

கொஞ்ச நேரம்தன்னைத்தானே ஆசுவாசப்படுத்திக்கொண்டு வேலைகளில் ஆழ்ந்தாள்.

அன்று மாலை வீட்டிற்கு வந்தபோது அவளுக்கு வேறொரு உருவில் தலைவலி காத்திருந்தது.

தந்தை சுந்தரம் என்றுமில்லாததாய் வெளியே செல்லாமல் வீட்டிலேயே இருந்தார். அவர் தன்னிடம் பேசுவதற்காகத்தான் காத்திருக்கிறார் என்பது கொஞ்ச நேரத்தில் தான் நிர்மலாவுக்குப் புரிந்தது.

நிர்மலா உன்னிடம் ஒரு விஷயம்.... என்று ஆரம்பித்தபோது சாதாரணமாய்த்தான் தலை முடியைக் கோதியவாறு, சொல்லுங்களப்பா.... என்று கேட்டுக் கொண்டிருந்தவள் அவர் முழு விஷயத்தையும் சொல்லி முடித்ததும் பேயறைந்தவள் போல் ஆகி விட்டாள்.

அப்பாவின் பால்ய கால நண்பர் இன்று வீட்டிற்கு வந்து பேசிக் கொண்டிருந்தாரம். அவருக்கு ஒரே மகனாம். பாங்க் ஒன்றில் வேலை பார்க்கும் மகனுக்கு பெண் பார்ப்பதாகவும், விருப்பமிருந்தால் நிர்மலாவை தன் மருமகளாக்கிக் கொள்ள அவர் ஆசைப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறாராம்.

விஷயத்தை சொல்லி முடித்துவிட்டு சுந்தரம் ஆவலாய் அவளது முகக் குறிப்பைப் பார்க்க தாய் மைத்தேயியும் அவரோடு வந்து சேர்ந்து கொண்டாள்.



அப்பா... ப்ளீஸ் இப்போது வேண்டாம்.... என்றாள் நிர்மலா கெஞ்சலாய் ஆனால், தீர்க்கமான குரலில்.

என்ன நிர்மலா? எப்படியானாலும் நீ கல்யாணம் பண்ணத்தான் வேண்டும். இது நல்ல இடம். நல்ல மனிதர்க்ள. பையனும் எனக்குத் தெரிந்து நல்ல குணத்துடன்...

சுந்தரம் வார்த்தைகளை முடிக்கவில்லை. அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவள் போல் வெடிக்க ஆரம்பித்துவிட்டாள் நிர்மலா. குணத்தை கொண்டு குப்பையில் போடுங்கள். எனக்கு இப்போது கல்யாணம் வேண்டவே வேண்டாம். இப்போதுதான் படிப்பை முடித்திருக்கிறேன். வேலையில் சேர்ந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் கல்யாணப் பேச்சு எதற்கு? நான் சொல்கிற போது கல்யாணம் பண்ணி வையுங்கள். அது போதும். அதுவரைக்கும் எனக்குத் திருமணம் என்கிற பேச்சே வீட்டில் எடுக்கக் கூடாது!

ஒரே போடாக போட்டு விட்டாள் நிர்மலா. அவள் இவ்வளவு கோபப்பட்டு பேசியதை சுந்தரமும் மைத்தேயியும் ஒருநாளும் பார்த்ததில்லை. துடிப்பாய் வெடித்தவளைக் கண்டு அதிர்ந்துதான் போய் விட்டனர். மைத்ரேயி ஏதோ சொல்ல வாயெடுக்க முயல.... பார்வையாலே பேசாதிருக்கும்படி எச்சரித்து விட்டு சுந்தரம் ஒன்றும் சொல்லாது அகன்று விட்டார்.

அத்தோடு அவளது கல்யாணப் பேச்சையும் விட்டு விட்டார்கள் என்றே சொல்லலாம். அன்று இரவு நிர்மலா தூங்கி விட்டாள் என்ற நினைப்போடு டி.வி.யில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம் மனைவியிடம், மைத்ரேயி, நிர்மலாவுக்கு உடனே கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டமில்லை போல தெரிகிறது. கொஞ்ச காலம் போகட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம்... என்று பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்தபோது அவளுக்கு பெரும் நிம்மதியாய் இருந்தது.

கூடவே தான் அவ்வளவு கோபப்பட்டு ஆத்திரமாய் பேசியதை நினைத்து வியப்பாகவும் இருந்தது. பொதுவாக தனது கருத்துக்களை

மெலிதாக ஆனால், ஆணித்தரமாக புரிந்து கொள்ளும்படி சொல்வதே அவள் இயல்பு. இன்று இயல்புக்கு மாறாக அல்லவா அவள் நடந்து கொண்டது எதற்காக?

மறுநாள்□

வேலைக்குச் சென்ற அவளுக்கு அலுவலகம் பெரும் பரபரப்பில் இருந்தது ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. அலுவலக வாயிலில் இருந்து உள்ளே வரை விரைப்பா சபாரி தீனிபார்மில் அதிகாரிகள் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தனர். விசாரித்தபோது கம்பெனியில் இன்கம் டாக்ஸ் ரெய்ட்! என்ற பதில் கிடைத்ததும் திகைத்துப் போனாள்.

அவளை மேலே யோசிக்க விடாதபடி ஒரு அதிகாரி வந்து யார் என்னவென்று விசாரித்து அவள் இருக்கையில் சென்று பேசாமல் அமர்ந்திருக்கும்படி அறிவுறுத்தி விட்டுப் போனார்.

நிர்மலா சத்யனைப் பார்க்கத்தான் துடித்தாள். ஆனால், அவன் ரூமிற்குப் போக முடியாதபடி அதிகாரிகளின் கூட்டம் அவனது அறையை மொய்த்திருந்தது.

பக்கத்திலிருந்த கவிதாதான் அவளை ஆறுதல் படுத்தினாள். இதில் பயம் ஒன்றும் கொள்ள வேண்டியதில்லை மேடம். நம் அலுவலக கணக்குகளில் எந்தவித பித்தலாட்டமும் கிடையாது. கரெக்ட்டாக வரி கட்டி வருகிறோம். எம்.டி. சாரின் கண்டிப்பான உத்தரவு இது...

ஆனாலும், நடக்கும் காரியங்களைப் பார்த்த நிர்மலாவால் பதட்டப்படாமல் இருக்க முடியவில்லை. ஆள் ஆளுக்கு அதிகாரிகள் அலுவலகத்தின் அறைகளுக்குள் புகுந்து பைல்களைக் குலைத்துக் கொண்டு பதுக்கல் பொருளைத் தேடுவதைப் போல தேடிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் கம்ப்தீட்டர் ப்ளாப்பிகளைப் போட்டு டேட்டாக்களை சரிபார்த்துக் கொண்டிருந்தனர். நிர்மலாவுக்கு திடுமெனத் தான் அந்த ஞாபகம் உரைத்தது.

நேற்று ஆர் அண்டு டி பிரிவில் சத்யனுடன் இருந்தபோது



அவன் கையில் ஒரு சிறு பெட்டி இருந்தது. நிர்மலா, இதன் மதிப்பு எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபாய்! என்று சத்யன் பெட்டியைக் காட்டிச் சொன்ன போது அவளுக்கு வியப்பாய் இருந்தது. என்ன... ஒரு கோடி ரூபாயா? அப்படி என்ன பொருள் இருக்கிறது சார்? என்றாள் ஆவலாய், சத்யன் புன்முறுவலுடன் அந்த சிறு பெட்டியைத் திறந்து காட்டினான்.

உள்ளே பளபளக்கு வெளிர் நிறத்தில் வைரங்கள் மின்னும் செயின் ஒன்று. நிர்மலா, இது சாதாரண செயில் அல்ல. பிளாட்டினச் செயின்! தங்கத்தைப் போல மூன்று மடங்கு விலை பிளாட்டினத்திற்கு. போதாக் குறைக்கு விலையுயர்ந்த வைரங்கள் பதிக்கப்பட்டது. எனது துபாய் ந்பர் ஒருவர் தன் மனைவிக்காக வாங்கி வந்தார். இன்கம்டாக்ஸ: பிரச்சனை எதும் வந்து விடும் என பயந்து ஒரு வாரம் என்னை பாதுகாப்பாய் வைத்திருக்கும்படி சொல்லியிருக்கிறார் சத்யன் சொன்னது உரைத்ததும் நிர்மலா பயந்து போனாள்.

ஒருவேளை இன்று அதே இன்கம்டாக்ஸ் விஷயத்தில் அந்த பிளாட்டினச் செயின் மாட்டிக் கொண்டால் சத்யன் வகையாய் மாட்டிக் கொள்ள நேரிடுமே!

ஒரு கணம் பதைத்துப்போய் யோசித்தவள் நேராய் ஆர் அண்டு டி பிரிவிற்குச் சென்று பார்த்துவிட வேண்டும். சத்யன் ஞாபக மறதியாய்க் கூட பெட்டியை அங்கு வைத்திருக்கக் கூடும். நினைப்பு தோன்றியதும் நிர்மலா எழுந்து விட்டாள்.

ஆனால், மறுபடியும் ஒரு சிக்கல். ஆர் அண்டு டி பிரிவு அலுவலக வலது கோடியில் இருக்கிறது. அங்கு செல்ல அவளை ரெய்டு நடத்தும் அதிகாரிகள் அனுமதிக்க வேண்டுமே? யோசித்தவளை நோக்கி ஒரு சபாரி சூட் அதிகாரி வந்து, உங்களுடைய அக்கவுண்ட் புக்குகளை எடுத்து வையுங்கள். நான் பார்வையிட வேண்டும் என சொல்லவும் நிர்மலாவுக்கு பளீரென அந்த ஐடியா உதித்தது.

ஸார்... என்று இழுத்தவாறு நிர்மலா நிமிர்ந்தவள், ஸார், நான் அக்கவுண்ட் புக்குகளைக் காட்டுகிறேன். ஆனால், என்னுடைய பவர்

கண்ணாடி அந்த ரூமில் இருக்கிறது. நேற்று வேலை முடித்து செல்லும்போது டிபன் பாக்ஸுடன் அங்கு வைத்துவிட்டு, வந்துவிட்டேன்... என்றாள்.

அவள் சொன்னதை அப்படியே நம்பி விட்ட அந்த அதிகாரி, போய் சீக்கிரமாக எடுத்து வாருங்கள்... என்று அவசரப்படுத்தி அனுப்பினார். அதிகாரியே உத்தரவிட்டு விட்டதால் நிர்மலாவை யாரும் தடுக்கவில்லை. விறுவிறுவென நடந்து ஆர் அண்டு டி பிரிவை அடைந்தாள். அறைக்குள் கதவை திறந்து உள்ளே நுழைந்தாள். உள்ளே அவள் எதிர்பார்த்தபடியே மேஜையில் அந்த சிறிய பெட்டி சத்யன் அவள் நினைத்தபடியே ஞாபக மறதியாய் விட்டுச் சென்றிருக்கிறான். டபக்கென அந்தப் பெட்டியை எடுத்தவள் உள்ளே செயின் இருப்பதை உறுதி செய்து விட்டு மறைக்க இடம் தேடினாள். அவள் கண்களில் நிஜமாகவே அவள் நேற்று மறதியாய் விட்டுச் சென்ற டிபன் பாக்ஸும் தென்பட... சமயோசிதமாய் அதில் பெட்டியை வைத்து மூடினாள்.

அங்குள்ள கம்ப்யூட்டர் டெர்மினல்கள் முன்னால் கண் உறுத்தலைத் தடுக்க ஒரு சில பவர்லெஸ் கண்ணாடிகளை வைத்திருப்பது வழக்கம். அவற்றில் ஒன்றை எடுத்த நிர்மலா அணிந்து கொண்டாள். இப்போது எல்லாம் சரியாகி விட்டது. அவளை யாரும் சந்தேகப்படமுடியாது.

கண்ணில் கண்ணாடியும் கையில் டிபன் பாக்ஸுமாய் அவள் தன் சீட்டிற்கு திரும்பியபோது எந்தவித பிரச்சனையுமில்லை. டிபன் பாக்ஸை தன் ஹாண்ட் பேக்கில் பத்திரப் படுத்திவிட்டு அதிகாரி கேட்ட அக்கவுண்ட் புக்குகளை காட்ட ஆரம்பித்தாள்.

ஆயிற்று மூன்று மணி நேர முடிவிற்குப் பின் இன்கம் டாக்ஸ் ரெய்டும் முடிந்து போனது. ஒன்றும் கிடைக்காத வெறுங்கையோடு அதிகாரிகள் ஏமாற்றமாய் கிளம்பிப் போனார்கள். நிர்மலாவிற்கு மூச்சே அப்போதுதான் வந்தது.

உடனே மின்னலாய் எழுந்து சத்யனின் ரூமிற்குப் போனவள் களைப்புடன் புரியாமல் நிமிர்ந்த சத்யன் தன் முன் டிபன் பாக்ஸைப்



பிரித்தாள். பரபரப்புடன் எழுந்த சத்யனுக்கு விஷயம் புரிந்தது. அதே பதட்டத்துடன் அவள் பக்கம் வந்தவன், மை காட்! அது உன்னிடம் தான் இருக்கிறதா? சந்தோஷ மிகுதியில் அவள் சற்றும் எதிர்பாரா காரியத்தைச் செய்தான் அவன்.

அப்படியே அவளை இறுக கட்டிக் கொண்டான் சத்யன்.



# 6



நிர்மலா சற்றம் எதிர்பார்க்கவில்லை. சத்யன் அவளை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டான். மின் அதிர்வுபோல அவளது உடம்பே சிலிர்த்துப் போனது

எவ்வளவு பெரிய ஆபத்து? நீ காப்பாற்றி விட்டாய் நிர்மலா? என்றபடி எவ்வளவு வேகத்தில் அவளை கட்டுப் பிடித்தானோ அதே வேகத்தில் அவளை விடுவித்து விலகவும் செய்தான் சத்யன்.

ஒரு கணம் நிர்மலாவுக்கு அந்தச் சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வதே என்பதே தெரியாமல் போய்விட்டது. கொஞ்சமும் எதிர்பார்க்காத ஒன்று நடக்கும்போது, அடுத்து என்ன செய்ய என்று யோசிப்பதற்குள்... விஷயமே நடந்து முடிந்து விட்டது.

உடம்பு முழுவதும் எழுந்த உணர்ச்சிகளின் அலைபாய்தல். நிலை தடுமாறுதல் எல்லாம் அவளுக்குள் எழும்பி சட்டென அடங்கியது. ஒரு நிலைக்கு வந்து சேர்ந்து விட்ட நிம்மதியும் அவளுக்கு உண்டாகியது.

அவளது உணர்ச்சிகளை உணராத சத்யனோ பெரும் ஆபத்டதிலிருந்து தப்பித்த மன நிலையிலே ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான். நல்லவேளை! பெரும் ஆபத்தில் மாட்டியிருப்பேன். இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் நண்பரின் பொருள் என்று சொன்னால் எல்லாம் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஒரு கோடி ரூபாய்க்கு பொய்யாக என்னால் கணக்கு காட்டவும் முடியாது.

பொருளையும் இழந்திருப்பேன். இவ்வளவு நாள் கட்டிகாத்து வரும் நல்ல பெயரையும் இழந்திருப்பேன். அதிர்ஷ்ட வசமாய் நீ காப்பாற்றி விட்டாய் ரொம்பவும் நன்றி நிர்மலா... வாய் வலிக்கச் சொல்லி முடித்தான் சத்யன்.

ஒரு வழியாய் அன்றைய அலுவலக வேலையும் இன்கம்டாக்ஸ் பரபரப்பிலேயே போயிற்று. நிர்மலா வீடு வந்து இரவு படுத்தவள் நெடுநேரம் தூங்க முடியாமல் தவித்தாள்.

சத்யன் அணைத்துப் பிடித்திருந்த அந்த சில நொடிகள் அவளைப் பாடாய் படுத்தியது. ஒரு பூக்குவியலை நெஞ்சார அணைப்பது போல் அல்லவா மென்மையான தன்னோடு இணைத:துக் கொண்டான். அவனது வலுவான கரங்கள் அவளை எவ்வளவு இறுக்கமாய் பற்றியிருந்தன. அந்த அணைப்பை, உடம்பின் நெருக்கமான ஸ்பரிசத்தை இப்போது நினைத்தாலும், அவளது உடம்பே தகதகப்பது போல் நிர்மலா உணர்ந்தாள்.

இன்னொரு விஷயமும் அவளுக்கு சந்தோஷமாய் பீறிட்டுக் கிறம்பியது. அந்த வித்தியாசமான சூழ்நிலையில், பெரும் இன்கம்டாக்ஸ் குழப்பத்தில்தான் சத்யன் அவளை அணைத்தான். அந்த சந்தர்ப்பத்தில் அவளையறியமால் நடந்த விஷயம். அது வெளி மனத்திற்குத் தெரியாமல் அவனது உள்மனம் சட்டென செய்த காரியம் அது.

அப்படியானால்... அவனது உள் மனதில் அந்த எண்ணம்...அவளைப் பற்றிய நினைப்பு, அவள் நினைத்தவாறு அவனுக்கும் இருக்க வேண்டும். அதனாலே உள்மனம் எவ்வித பாசாங்கும் செய்யாமல் அப்படியே அவளை அணைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதுதான் நடந்திருக்கிறது என்ற முடிவிற்கும் வந்தாள்.

அதற்குப் பின் வந்த இரு வாரங்கள் எவ்வித சலனமுமில்லாமல் போனது. சத்யன் ஆர்.அண்டு டி. பிரிவில் தினமும் பல மணி நேரங்கள் கழிப்பது அவளுக்கு பெரும் நிம்மதியாகவும் இருந்தது. இடையில் இரண்டு நாள் அலுவலக விஷயமாக அவன் பெங்களூர்



டூர் சென்ற போது அந்த இரண்டு நாளும் அவனைக்காண முடியாமல் அவள் தவித்த தவிப்பு அவளுக்குத்தான் புரியும். அவன் இல்லாத அலுவலகத்தில் முள் மேல் உட்கார்ந்திருப்பது போல் தான் நிலை கொள்ளாமல் தவித்தாள். இரண்டு நாள் கழித்து மூன்றாம் நாள் காலை அவனை தரிசித்ததும் தான் அவளுக்க உயிரே வந்தது.

வந்து விட்டீர்களா? இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது! தன்னையறியாமல் அவள் வார்த்தைகளை விட்டு விட்டதை சத்யன் பிடித்துக் கொண்டான்.

என்ன நிம்மதியா இருக்கிறதா? அப்படியானால்... என்னைக் காணாமல் தவித்துப் போய் விட்டாயா? என்று நேருக்கு நேர் கேட்கவும், அவளுக்கு சங்கடமாய் போயிற்று. கீழுதட்டை லேசாய் உள்ளிழுத்து அழுத்திய வண்ணம் யோசித்தவள் சமாளிக்கவும் சென்தாள்.

அதாவது...ஸார் நீங்கள் சொல்வீர்களே... உற்சாகம்....? அது தினம் சுறுசுறுப்பாய் வேலை பார்க்கும் தங்களைக் கண்டால் தானாய் வரும். இரண்டு நாட்களும் நீங்கள் இல்லாததால் நானும் அலுவலக பணியாளர்களும் உற்சாகமில்லாமல் தவித்துப் போய் விட்டோம்.

அவள் பதிலை ஒரு குறிஞ்சிரிப்புடன் அவன் ரசிக்கவும், அவளது முகம் சிவந்து போயிற்று. வெட்கிப் போனவளாய் விறுவிறுவென அகன்று தன் சீட்டிற்கு வந்து விட்டாள். உள்ளூர மனதில் ஒரு சிறு அமைதியின்மை சலனம். இந்த சத்யன் ஏன் சில சமயங்களில் ஒருமையிலும் சில சமயங்களில் பன்மையிலும் அவளை அழைக்கிறான்?

முதலில் வேலைக்குச் சேருமுன் அந்த அதீத மரியாதை பன்மை சரிதான். பிறகு சாதாரணமாக வா, போ எனட்று அவன் பேசியபோது அது அவளுக்கு பாந்தமாகத்தோன்றியது.

ஆனால்...

மற்ற அலுவலக பணியாளர்கள் முன் அவளைப் பன்மையில் அழைப்பதும் தனிமையில் அவளை ஒருமையில் அழைப்பதும்

எதற்காக?

இன்டிமஸி என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே? ஒருவித நெருக்கமான தொடர்பு, எனக்கும் உனக்கும் உள்ள தனிப்பட்ட நெருக்கமான பழக்கம் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறானோ? அதைத் தவிர வேறு என்ன காரணம் கூடும்?

அவளால் எவ்வளவு யோசித்தும் ஒரு முடிவிற்கு வர முடியவில்லை. சந்தேகப் பிசாசாய சில கேள்விகள் பிடித்து அவளை ஆட்டியது.

கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தாள் நிர்மலா.

அவனோடு பேச வேண்டும்! அவன் மனதில் அவளைப் பற்றிய எண்ணம் என் என்று உள்ளங்கை நெல்லிக்கனி போல ஐயம் திரிபற தெரிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் தீர்மானமும் எடுத்துக் கொண்டாள்.

அதற்காக நல்ல நாள், நல்லவேளை குறித்து அவனோடு அவள் பேசப் போகும்போது அவளுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

சத்யனுடைய அறையில் நெருக்கமாய் அவனது கழுத்தை வளைத்துக் கொஞ்சியபடி அந்தப் பெண் உட்கார்ந்திருந்தாள்.



# 7



சத்யனுடைய அறையில் ஒரு பெண் அதுவும் நெருக்கமாய் அவன் கழுத்தை வளைத்தபடி நிர்மலாவால் அந்தக் காட்சியை நம்பவே முடியவில்லை!

நடப்பது கனவா? என்ற ஐயத்துடன் பார்த்தவளுக்கு நிஜம்தான் என்பது புரிந்தது.

சத்யன் பைல் ஏதோ ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்க, அந்தப் பெண்ட அவனது சீட்டின் விளிம்புப் பகுதியில் உட்கார்ந்து கொண்டு



கரங்களால் அவனது கழுத்தை வளைத்திருந்தாள். முகத்தோடு முகம் உரசாத குறைதான். அவ்வளவு நெருக்கம்.

ஆனால்... சத்யன் எதையும் ஆட்சேபிக்கவில்லை. அவன் இயல்பான ஒன்று நடப்பது போல் எந்தவித சலனமுமேயில்லாமல் பைல்களின் கோப்புகளை பார்து ஏதோ சொல்லிக் கொண்டிருக்க அவன் சொல்வதற்கெல்லாம் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அரிசிப் பற்கள் நறநறவென கடிக்காத குறையாய் அவளைப் பார்த்தாள் நிர்மலா.

நல்ல மாநிறம் அவளுக்கு. இருபது வயது தோற்றத்தை அதீத மேக்கப், ஜிகினா சமாச்சாரங்கள் குறைத்திருக்க முயன்றிருந்தாள். அவளது குட்டையான உயரத்திற்கு தூக்கலான ஹை ஹீல்ஸ் குதிரை வால் போல் பாப் கட் செய்யப்பட்ட முடி, லிப்ஸ்டிக் சாயத்துடன் உதடுகள் தெற்றுப் பல் பெரிதாய் சிரித்தவள், சிரித்தபடியே நிமிர்ந்தபோது நிர்மலாவை கவனித்தும் விட்டாள்.

நிர்மலாவைக் கவனித்தவள் கூர்மையான சுட்டெரிக்கும் பார்வையை ஒரு கணம் வீசிவிட்டு...ஒரு கணம் தான்.... மறுகணம் எதுவுமே நிகழாதது போல் அவள் முகம் மாறியது. திரும்பவும் சிரித்து சத்யனுடன் கொஞ்சியபடி பேச ஆரம்பித்து விட்டாள்.

நிர்மலாவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவளது செய்கையின் அர்த்தம் தெரியவில்லை.

அர்த்தம் புரிந்ததும் வியப்பும் கோபமும் அவளை ஒரு சேர தாக்கியது.

அவள் நிர்மலாவை ஒரு பொருட்டாகவே மதிக்க வில்லையாம். அவள் வந்திருப்பதை கவனியாமல் இருந்த சத்யனுக்கு உணர்த்த விரும்பவில்லையாம். நாங்கள் முக்கிய வேலையில் இருக்கிறோம். நிற்பதானால் நில், இல்லையென்றால் போய் விடு... என நிர்மலாவுக்கு முகத்தில் அறையாத குறையாய் சொல்லி விட்டாள்.

அதற்கு மேல் அங்கு நிற்கு நிர்மலாவுக்கு பைத்தியமா? முகம் சிவக்க உணர்ச்சிகளில் துடித்த உதடுகளுடன் விறுவிறுவென

அவள் அறைக்குள் வந்ததையோ
வெளியே வந்து விட்டாள். சத்யன் கொஞ்சமும்
கோபமாய் வெளியேறிப் போனதையோ உணர்ந்தபோது நெஞ்சே வெடித்து விடும்
உணரவில்லை.... என்பதை யுணர்ந்தபோது நெஞ்சே வெடித்து விடும்
போல் இருந்தது.

சத்யன் எதனால் உணரவில்லை? என்னாயிற்று அவனுக்கு?
நிச்சயம் அவள் ஒரு
பக்கத்தில் ஒரு சாகஸக்காரியை... நெளிந்து சாகஸ
சாகஸக்காரிதான்... என்னமாய் சத்யனுடன் குழைந்து நெளிந்து சாகஸ
நடிப்பு நடிக்கிறாள்? இப்படிப் பட்டவள் எப்படி சத்யனின் ரூமிற்குள்
நுழைந்தாள்? அவனுடன் என்ன தொடர்பு அவளுக்கு?

தன்னைத் துளைத்த கேள்விகளை யாரிடம் எப்படி கேட்பது
என்று புரியாமல் தவிக்கத்தான் செய்தாள் நிர்மலா. எம்.டி.ரூமிற்குள்
ஒரு பெண் அவன் கழுத்தை பிடித்து கொஞ்சுகிறாள் யாரவள்? என்று
யாரிடம் விசாரிப்பாள்?

உதடு துடிக்க யோசித்தமாள். கொஞ்ச நிமிடங்கள்
கொதிப்புடனே கழிந்தது.

எல்லா கூத்திற்கும் காரணம் சத்யன்தானே? அவனிடமே
கேட்டு விட்டால் போயிற்று. நேரில் ஏன் போக வேண்டும்?
இண்டர்காம் என்ற ஒன்று இருக்கிறதே!ண

இண்டர்காமின் ரிசீவரை எடுத்டது சத்யனின் ரூமிற்கான
எண்ணை அழுத்தினாள்.

மறுமுனையில் சத்யன் எடுத்ததும் குரலில் எந்தவொரு
உணர்ச்சியையும் காட்டாமல், ஹலோ சார், நான் நிர்மலா... என்றாள்.

என்ன விஷயம் நிர்மலா? என்றான் சத்யனும் அதே
உணர்ச்சியில்லாத குரலில்.

சார், அந்தக் குட்லக் கம்யூனிகேஷன்ஸ் தொடர்பான
கட்டுமான பணியில் சில செக் ஆர்டர்களில் உங்களிடம்
கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது. வரலாமால? என்றாள்.

வரலாம்....

ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு ரிசீவரை வைத்து



விட்டான் சத்யன்.

வரலாமாம் எதற்கு? அந்த சல்லாபக் காட்சியை மறுபடியும்
அவள் கண்டுகளிக்கவா?

பைல்களை எடுத்துக் கொண்டு எந்தவித உணர்ச்சியையும்
காட்டாத ஒரு விரைப்புடன் மறுபடியும் சத்யனின் அறைக்கதவை
திறந்து உள்ளே நுழைந்தாள்.

முன்பு கண்டது போல்தான் கழுத்தை வளைத்து கொஞ்சுகிற
காட்சியை காண நேருமோ என்ற உள்ளூர பயமும் அவளுக்கு

ஆனால்... நல்லவேளை! அந்த சாகஸக்காரி இப்போது சத்யன்
பக்கத்தில் இல்லை. எதிர் சீட்டில் அமர்ந்திருந்தாள். உள்ளே நுழைந்த
நிர்மலாவை தேவையில்லாத எரிச்சல் பார்வை ஒன்று பார்த்துவிட்டு
திரும்பிக்கொண்டாள்.

சதய்ன் நிமிர்ந்து நேராய் அவள் கண்களை நோக்கியபோது
டக்கென குனிந்தவளாய் பைல்களையும் செக்புக்கையும் நீட்டினாள்
நிர்மலா.

அவன் ஏதாவது அந்தப் பெண் பற்றி சொல்ல மாட்டானா?
என்ற ஆவலையும் அவளால் அடக்க முடியிவல்லை. தெரிந்து
கொள்ளாவிட்டால் அவள் தலையே வெடித்து விடும் போல்
இருந்தது.

சத்யன் ஒன்றும் பேசாமல்.... பைல்களை பார்வையிட்டு செக்
புக்குகளில் கையெழுத்திட்டான். திரும்பவும் அவளிடம் கொடுத்தான்.

இனி அவள் அங்கு நிற்க முடியாது. போக வேண்டியதுதான்.

நிர்மலாவால் ஒன்று செய்ய முடியவில்லை. பரிதவித்தவளாய்
மெல்ல திரும்பினாள். ரூம் கதவை நோக்கி நடை பழகுபவள் போல்
மெல்ல நடந்தாள்.

சத்யனுக்கு ஏதோ உரைத்திருக்க வேண்டும்.

நிர்மலா... என்றான்.

அவன் அழைத்ததும் ஸ்விட்ச் போட்டாற்போல் டக்கென
திரும்பினாள் அவள்.

பார்த்தாயா! இவளை உனக்கு அறிமுகப்படுத்தவே இல்லையே? என்றபடி சத்யன் ஆரம்பிக்கவும் அவளுக்கு அப்பாடா என்ற நிம்மதியே ஏற்பட்டது.

ஆனால், அவள் நிம்மதி நெடுநேரம் நீடிக்கவில்லை. அந்தப் பெண் யாரென்று சத்யன் சொன்னபோது பெரும் இடிதான் நிஜமாகவே அவள் தலையில் இறங்கியது



# 8



நிர்மலா, இவள் என் அத்தை பெண். பெயர் மஞ்சரி. என்னைக் கட்டிக் கொள்ளப் போகிறவளும் கூட! நிதானமாய் சத்யன் சொன்னபோது சக்தி வாய்ந்த ஜெலட்டின் குச்சிகளை யளரோ அவள் மண்டையில் செருகி மூளையே வெடித்து விட்டது போல் தான் நிர்மலா உணர்ந்தாள்.

அவள் கொஞ்ச நேரம் முன் கொண்டிருந்த பரபரப்பு சுவடி தெரியாமல் போய் வாயடைத்துக் கொண்டது. நிமிர்ந்து அந்தப் பெண்ணையோ சத்யனையோ பார்க்கக் கூட அவளுக்கு திராணியில்லை. ஏற்பட்ட எதிர்பாராத அதிர்ச்சியில் தெம்பிழந்து திடமிழந்து ஓடிவிடும் நிலைதான் அவளுக்கு.

ஆனால், அவளது நிலைமைஅ புரியாத சத்யனோ திரும்பி மஞ்சரியிடம், நிர்மலா பற்றி சொல்லி □அவளுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஸார் எனக்கு தலைவலிக்கிறது. என்னை மன்னித்து விடுங்கள். நான் உடனே போயாக வேண்டும் சொல்லி விட்டு விறுவிறுவென அவன் பதிலுக்குக் காத்திராமல் வெளிவந்தாள் நிர்மலா.

அதற்கு மேல் அங்கு நின்றால் சத்யன் முன்னிலையிலேயே அழுது விடுவோமோ என்ற பயம் அவளுக்கு. கால்களின் இரு பெரு



விரல்களையும் அழுந்த ஊன்றியவளுக்கு, அழுத்திய வேகத்தில் அந்தத் தரைக்குள்ளே போய்விட மாட்டோமோ என்றிருந்தது. வெட்கக்கேடு அவன்தான் சத்யனை விரும்பியிருருக்கிறாள். சத்யன் அவளை விரும்பவில்லை.

அத்தை மகளாம்... கட்டிக் கொள்ளப் போகிறவளாம்! என்ன ஒரு அநியாயம்!

அப்படியானால்.... இவ்வளவு நாள் என்னுடன் பழகியது...?

விளையாட்டா? சத்யன் விளையாடுகிறானா? யளாரோ ஒரு பெண்ணை கூட்டிக்கொண்டு வந்து அவள் அத்தை பெண் கல்யாணம் கட்டிக் கொள்ளப் போகிறேன் என்றெல்லாம் சொல்லி என்னை பயங்காட்டுகிறானா?

எழுந்த சந்தேகத்தை சக ஊழியர்களிடம் நாசூக்காய் அவள் விசாரிக்க... சந்தேகமில்லை!

அவள் தலையில் விழுந்தது இடி! இடியேதான் என்பது புரிந்தது.

உனக்குத் தெரியாதா நிர்மலா? அவள் பெயர். மஞ்சரி. எம்.டியின் அத்தை பெண். அவளைத்தான் எம்.டி.சார் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார். முன்பே கல்யாண நிச்சயதார்த்தமும் நடந்து விட்டது. மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்று விட்டு இரண்டு நாளுக்கு முன்தான் தாயகம் திரும்பியிருக்கிறாள். அனேகமாய் படிப்பு முடிந்து விட்டதால் இன்னும் ஓரிரு மாதங்களில் இருவருக்கும் கல்யாண ஏற்பாடு நடந்து விடும்..... என முடிக்கவும் பேசவேறு வார்த்தையின்றி சப்த நாடி ஒடுங்கியவளாய் உட்கார்ந்து விட்டாள் நிர்மலா.

அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட அந்த அலுவலகத்தில் அவளால் இருக்க முடியவில்லை. உடனே வீட்டிற்கு ஓடியாக வேண்டும்.

தலைவலி வீட்டிற்குப் போகிறேன்.... ஒரே வரியில் எதிர்ப்பட்ட சூபர்வைசர் கல்பனா மேடத்திடம் சொல்லிவிட்டு அவளின் வியப்பான

பார்வையை பொருட்படுத்தாமல் ஹாண்ட் பேக்குடன் விறுவிறுவென நடந்தாள்.

தலைதெறிக்க... என்று சொல்வார்களே.... அதுபோல் தான் அவளது நிலைமை இருந்தது. அவளது புத்தியில் எதுவும் உரைக்கவில்லை. பஸ்ஸிற்குக் கூட காத்திராமல் வீடு நோக்கி நடையாய் நடந்தாள். எல்லோரும் அவளையே பார்ப்பது பார்! என்னமாய் ஏமாந்து விட்டாள்! தோற்று விட்டாள் என்றெல்லாம் பரிகாசிப்பது போல் கூட இருந்தது.

வெடிக்க இருந்த அ?ழுகையையும், ஆத்திரத்தையும் அடக்கிப் பிடித்துக கொண்டு வீட்டினுள் நுழைந்தபோது சீக்கிரமே திரும்பி விட்ட அவளை ஆச்சரியத்துடன் தான் பார்த்தாள் தாய் மைத்ரேயி. அவள் முகம் இருந்த போக்கு அவளை ரொம்பவும் யோசிக்க வைத்தது.

என்ன நிர்மலா, என்னாயிற்று? அலுவலகத்தில் ஏதும் பிரச்சனையா? யாரும் உன்னை திட்டி விட்டார்களா?

படபடத்டத தாய்க்கு பொறுமையாய் பதில் சொல்லக் கூட நிர்மலாவால் முடியவில்லைதான். இருந்தும் தனது எரிச்சலில் தாயின் அன்பு மனத்தை காயப்படுத்தி விடக்கூடாது என்று பொறுமையை இழுத்துப் பிடித்தவளாய், அம்மா, ப்ளீஸ்... எதுவும் கேட்காதீர்கள்.... எனக்கு பயங்கர தலைவலி. கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கிறேன். பிறகு பேசிக்கொள்ளலாம்.,... கூறியவளாய் தாயின் பதிலுக்குக் காத்திராமல் தனது அறைக்கச் சென்று கதவைச் சாத்திடிக் கொண்டாள்.

சுந்தரம் வேறு அப்போது வீட்டில் இல்லை. மைத்ரேயியால் அதற்கு மேல் தீகிக்க ஒன்றும் முடடியவில்லை. சின்னப் பெண்ணை தலைவலி இந்த பாடாய் படுத்துகிறதே.... என்று அவளின் போக்குக்கே விட்டு விட்டாள்.

தனது அறையில் கட்டிலில் வி ழுந்ததும் அதுவரை அடக்கிய உணர்ச்சிகளை கட்டவிழ்ந்து விட்டவள் போல் மடை திறந்த வெள்ளமாய் அழ ஆரம்பித்தாள்.

எவ்வளவு பெரிய மடத்தனம் செய்திருக்கிறாள்.... காதல்,



கல்யாணம் என்று அதற்குள் எத்தனை கற்பனைகள் செய்துவிட்டாள்.

இன்று.... எல்லாமே பொய்யாகி விட்டதே! சத்யன் அவளை எள்ளவும் காதலிக்கவில்லையே! அவன் மனதில் அவளைப் பற்றி கொஞ்சமாவது ஈரம் இருந்தால் இப்படிச் சொல்வானா?

கொஞ்சம் கொஞ்சமாய் குருவிக் கூடு கட்டுவது போல்தானே அவள் கட்டினாள்! சிறு சிறு சம்பவங்கள் பேச்சுக்கள்தானே அவளை மயக்கியது. சத்யனுக்கும் அவள்மீது ஈடுபாடு இருப்பதாய் நம்ம வைத்தது! பின் என்னவாயிற்று? திடீரென எல்லாம் தலைகீழாய் மாறிவிட்டதே!

அப்படியானால்... சத்யனுக்கு எவ்விதமான உணர்ச்சியும் ஈடுபாடான மனநிலையும் ஏற்படவில்லையா? பின் அதற்கு அவளுடன் நெருக்கமாய் பழகினான்? எதற்காக அவளிடம் அன்பு காட்டி வசப்படுத்தினான்?

எல்லாம் சாதாரண பேச்சுத்தானா? எல்லோரிடமும் காட்டுவது போல் காட்டுகிற பரஸ்பர அன்புதானா?

ஆனால்....

அவள் என்ன முட்டாளா? சாதாண பரஸ்பர அன்பிற்கும் காதலுக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு விவரமிடில்லாதவளா?

அவளால் அதை கொஞ்சமும் ஒப்புக் கொள்ள முடிவில்லை. சத்யனின் நிலைக்கு நியாயம் நியாயம் கற்பிக்க முடியவில்லை. நியாயம் அவள் பக்கம் தான்.

ஆனால்.... என்ன செய்வது? சத்யன் வேறு விதமாய் முடிவெடுத்து விட்டானே?

ஆனால், ஒரு விஷயம் தெளிவாகி விட்டது. இனி வேறு வழியில்லை. சத்யன்அவளுக்கு கிடைக்கப் போவதில்லை. அந்த மஞ்சரிதான்அவனது மனைவி!

இதை யாராலும் மாற்ற முடியாது. எந்த அதிசயமும் நிகழப் போவதில்லை. கடல் மணலிலவ் வீடுகட்டிய மாதிரி தான் ஒரே ஓர் அலையில் எல்லாம் தரை மட்டமாகி விட்டது.

இனி என்ன செய்வது? கிடைக்க முடியாத சத்யனை நினைத்து உருகுவதா இல்லை இந்தத்ட தோல்வியை என்னால் தாங்க முடியாது என உயிரை விட்டு விடுவதா?

தன்னை மீறி துளிர்க்கும் கண்ணீர் துளைகளை பொருட்படுத்தாமல் எதையும் பாராத பார்வையாக அவள் சிலைபோல் ரொம்ப நேரம் அமர்ந்திருந்தாள்.

ஆனால், நிஜம் என்கிற ஒன்று இருக்கிறதே! எவ்வளவு நேரம்தான் ரூமைப் பூட்டிக் கொண்டு அழுது தீர்ப்பாள்?

அன்று இரவு நெருங்கியதும் அறையை விட்டு அழுது சிவந்த முகத்துடன் வெளிவந்தாள் அவசரமாய் முகம் கழுவினாள். விசாரித்த அம்மாவிடம், தலைவலி பரவாயில்லைம்மா என்று சமாளிக்கவும் செய்தாள்.

அடுத்த இரண்டு நாட்கள் அவளாகவே அலுவலகம் செல்லாமல் சூபர்வைசர் கல்பனாவிடம் டெலிபோனில் பேசினாள். உடம்புக்கு முடியவில்லை என லீவு எடுத்துக் கொண்டாள். அவளுக்கு கொஞ்சம் அவகாசம் தேவை. திரும்பவும் அலுவலகத்திற்குச் சென்று சத்டயனை, தன்னை.விரும்பாத அந்த முகத்தைப் பார்க்க மனதிற்கு திடம் வேண்டும்.

வீட்டில் அவளது திடீர் மாற்றம் கண்டு தவித்த பெற்றோர்களை ஒரு வழியாய் விஷயம் தெரிந்து விடாதபடி சமாளித்தும் விட்டாள்.

மூன்று நாள் இடைவெளிக்குப் பிறகு மனசே இல்லாமல் அலுவலகத்திற்குக் கிளம்பினாள். வழக்கமான குதூகல புன்சிரிப்பு இல்லாமல் அவள் அலுவலகம் கிளம்புவதை தாய் மைத்ரேயி வியப்புடன் கவனிப்பது அவளுக்கப் புரியத்தான் செய்தது.

இனி எப்படி அவளால் சிரிக்க இயலும்! நடந்ததை நினைத்து வேதனையுடன் ஒரு உப்புச் சப்பில்லாத அர்த்தமற்ற வாழ்க்கை வாழப் போகிறாள்.... அவ்வளவு தான்!

அலுவலகத்தில் நுழைந்தவள் வழக்கமான நலவிசாரிப்புகளை சமாளித்து சீட்டல் உட்கார்ந்தாள். அன்று சத்யன் அலுவலகம்



வரவில்லை. ஏதோ லயன்ஸ் கிளப் மீட்டிங் சென்றிருப்பதாய் கேள்விப்பட்டபோது பெரும் நிம்மதியாகவும் அவளுக்கு இருந்தது.

ஆனால், அவள் நிம்மதி நீடிக்கவில்லை. மதியம் உணவை முடித:துவிட்டு அவள் சீட்டிற்கு வந்தபோது எம்.டி.ரூமில் லைட் எரிந்தது. சத்யன் வந்து விட்டான்.

வந்தவன் முதல் வேலையாய் அவளைத்தான் கூப்பிட்டு விட்டான். அவன் முகத்தைப் பார்க்க திராணியற்று பயத்துடன் தான் நிர்மலா நுழைந்தாள். ஆனால், சத்யன் நிமிர்ந்தே பார்க்கவில்லை. நாலைந்து பைல்களை விரித்துப் பார்த்தபடி பரபரப்போடு நிமிர்ந்தவன், நிர்மலா, அந்த ஹைடெக் கம்நீனிகேஷன்ஸ: கட்டுமான ஸைட்டைப் பார்வையிட நாம் போக வேண்டும். கார் ரெடியாகி விடுமஅ;. ஐந்து நிமிடத்தில் தயாராய் இரு! என்றான்.

நாம் என்று சொன்னது அவளை திகைப்பாக்கியது. நான் எதற்கு சார்? என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

அந்த கட்டுமான ஸைட். நீ வடிவமைத்துக் கொடுத்த மாடல் தானே? கட்டிட காண்ட்ராக்டருக்கு கட்டிட லெவலிங் உயரத்தில் சந்தேகமாம். உன்னைக் கூட்டி வந்து விளக்கும்படி அவர்தான் கேட்டிருக்கிறார். என்று விளக்கம் சொல்லவும் அவளால் வேறு சாக்குப் போக்கு சொல்ல முடியவில்லை.

அதே நேரம் சத்யன் அவள் உடல்நலம் பற்றியோ, லீவுக்கான காரணம் பற்றியோ எதுவும் கேட்காதது அவளைத் துணுக்குறவும் செய்தது. அத்தை பெண் மோகத்தில் நம்மை ஒரேடியாய் மறந்து விட்டானா? இல்லை தலையே மூழ்கி விட்டானா?

எந்தச் சலனமுமின்றி உணர்ச்சியற்ற ஜடம் போல்தான் காரில் அவனுடன் ஏறிக்கொண்டு கிளம்பினாள். சத்யனே காரை டிரைவ் செய்தான்.

இதே...அனுபவம்... சத்யனுடன் காரில் செல்லும் வலாய்ப்பு முன்பு ஏற்பட்டிருந்தால்.... அவள் எவ்வளவு குதூகலித்திருப்பாள்? எவ்வளவு உற்சாகம் கொண்டிருப்பாள்?

ஆனால்..... இன்று? அவனுக்கு பக்கத்து சீட்டில்

சத்யனுடன்முள் மேல் இருப்பது போல் அல்லவா இருக்கிறது? எப்படா இறங்குவோம். அவனது பார்வையிலிருந்து விலகி ஓடுவோம் என்றுதான் துடித்தாள். அதிலும் அடிக்கடி சத்யன் அவளையே உற்று நோக்குவது போல் பிரமை ஏற்பட்டு அவளை மேலும் சங்கடப்படுத்தியது.

ஆனால், சத்யனுடன் அவள் பக்கம் திரும்பவில்லை. கருமமே கண்ணாய் காரை ஓட்டினான். நிர்மலா இருந்த பித்துப் பிடித்த மனநிலையிலே கார் செல்லும் பாதையை கூட அவள் கவனிக்கவில்லை.

கார் நின்றபோதுதான் கவனித்து திடுக்கிட்டாள். நின்ற இடம் மரங்கள் சூழந்த ரோஸரி பூங்கா!

என்ன ஸார், கட்டுமான ஸைட்டுக்குப் போகாமல் இங்கு பூங்காவிற்கு வந்து... என்று ஆரம்பித்தவள், ஸ்டியரிங்கில் கைகளை அழுத்தியபடி தலைசாய்த்து அவன் பார்த்த கூரான பார்வையிலவ்... முடிக்க முடியாமல் திணறினாள்.

அடுத்து அவள் கேட்ட கேள்வியில் அவளது உயிரே போய் விட்டது.



# 9



சத்யன் கேட்டான். நிர்மலாவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவனிடமிருந்து அப்படி ஒரு கேள்வியை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தட்டுத்தடுமாறியவளாய், எ... என்ன... என்ன... கேட்டீர்கள்? என்றாள் தெம்பிழந்த குரலில்

நீ என்னை விரும்புகிறாயா....? என் மீது உனக்க காதலா? சொல்.... சொல் நிர்மலா?

ஏறக்குறைய அதட்டும் குரலில் தான் சத்யனின் வார்த்தைகள் ஒலித்தது.



ஆனால்... அவளால் இந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்ல முடியும்? பதில் சொல்லித்தான் என்ன ஆகப்போகிறது?

பதில் சொல் நிர்மலா....

மறுபடியும் சத்யன் பரபரத்ததும் உதடுகளைப் பிரிக்காமல் மறுப்பாய் தலையசைத்தாள் அவள்.

நீ என்டன விரும்பவில்லை?

இல்லை.... இல்லவே.... இல்லை.....

பொய் சொல்கிறாய் நீ....

இல்லை நிஜம். எனக்கு அந்த மாதிரி எந்த எண்ணமும் கிடையாது...

அவன் கேட்க கேட்க கிளப்பிள்ளை போல் அவசரமாய் பதில் சொன்னாள் அவள்.

ஆனால், சத்யன் விடவில்லை.

நீ என்னை விரும்பியிருக்கிறாய். மஞ்சரியை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்பது தெரிந்ததும் மனம் உடைந்து விட்டாய். அப்படித்தாதனே?

பட்டென பட்டாபணியை உடைப்பது போல் விஷயத்தை அவன் சொன்னதைக் கண்டு உள்ளூர பயங்கரமாய் திடுக்கிடத்தான் செய்தாள். ஆனாலும, அவள் காதலைச் சொல்ல இது நேரமல்லவே. பசுத்தோலை அவள் போர்த்தியாக வேண்டுமே!

நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதானால் அது உண்மையாகிவிடாது. நானும் அதை ஒத்துக் கொள்ள முடியாது எடுத்தெறிந்து பேசினாள் நிர்மலா.

அவன் விழியிடுக்க பார்த்தவன், அப்படியானால் உண்மையில் இந்த ரெண்டு நாள் உனக்கு என்னதான் ஆயிற்ற. சொல்? என்றான்.

ரெண்டு நாள்.... ஒன்றும்... ஒன்றும் ஆகவில்லை....

நடிக்காதே... உன் தந்தை எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்.

தந்தை? ஓ.... தந்தையை சந்தித்துபப் பேசியிருக்கிறானோ!

இப்போது எல்லாம் புரிகிறது.

இரண்டு நாள் நீ சரியாய் உண்ணாமல் கொள்ளாமல் பேயறைந்தாற்போல் இருந்த விஷயம் முழுவதுமட் எனக்கத் தெரியும்....

மறுபடியும் அவள் உண்மையை உடைத்தபோது அதை எப்படிச் சமாளிப்பது என்றுதான் தவித்தாள். சட்டென அவளுக்கு கற்பனை வளம் ஓடியது.

அது.... உங்களுக்குத் தெரியாது... என் தோழி ஒருத்தி தற்கொலை செய்து கொண்டாள். அது என் மனத்தை மிகவும் பாதித்து விட்டது என்று புதுக்குண்டைத் தூக்கிப் போட்டு அவன் நம்புகிறானா என்று பார்த்தாள்.

சத்யனின் முகம் நிஜமாகவே பின் வாங்கி துணுக்குற்றது. அவளுக்கு தைரியத்தைக் கொடுத்தது.இ கதை போல் சொல்ல ஆரம்பித்தாள் நிர்மலா.

ஸார்... உண்மை உங்களுக்குத் தெரியாது. என் கல்லூரித் தோழி ஒருத்தி.... அவள் பெயர் நீலா.. அவளுக்கு ஆண்கள் தொடர்பு, கெட்ட பழக்கங்கள் என்று சகலமும் உண்டு. தான் தோன்றித் தனமாய் தான் நினைத்தபடி வாழ்வை அமைத்டதுக் கொண்டவள். இதிடில் பிரவுன் சுகர் போன்ற போதைப் பழக்கமும் அவளுக்கு உண்டு. அடிக்கடி என்னை சந்திக்கும் போதெல்லாம் ஏதாவது பொய்யைச் சொல்லி போதைப் பழக்கத்திற்காக பணம்கேட்பாள். நானும் வேறு வழியில்லாது இரக்கப்பட்டு கொடுப்பேன். ஆனால், இரண்டு நாளுக்கு முன் நான் அலுவலகம் வரும்போது வழியில் மறித்து பணம் கேட்டாள். நான் போதைக்காக அவள் கேட்பதால் கோபத்துடன் பணம் தர மாட்டேன் என ஒரேடியாய் மறுத்து வந்து விட்டேன். ஆனால்.... நான் அலுவலகம் வந்ததும் கொஞ்ச நேரத்தில் அந்த தகவல் வந்தது. அந்த நீலா அமனமுடைந்து ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள் என்று விஷயம் கேள்விப்பட்டதும் நான் துடித்துப் போய் விட்டேன். நான் பணம் கொடுத்திருந்தால்... அவள் தற்கொலைசெய்திருக்க மாட்டாள் அல்லவா? அவள் சாவிற்கு நானே



காரணமாகி விட்டேனே! என்ற குற்ற உணர்ச்சி தாக்கியதும் இரண்டு நாள் இடிந்து மன அமைதியிழந்து எனக்கு என்னவோ போல் ஆயிற்று ஸார்....

அவளது விரக்தியான மனநிலையை பொய்யான கதையொன்றில் ஏற்றி உண்டமை போல் சொல்லி முடித்தாள் நிர்மலா.

அவள் நினைத்தது போலவே சத்யன் ரொம்பவும் குழம்பித்தான் போனான். இப்படியொரு கதையை அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்பதை அவனது தெளிவற்ற முகமே காட்டியது.

அப்படியானால், எதை எதிர்பார்த்தான்?

அவன் மீது அவள் ஆசைப்படதைச் சொல்வாள் என்று நினைத்தானா? அப்படி சொன்னால் என்ன செய்யப் போகிறான்? மஞ்சரியுடன் நடக்க இருக்கும் கல்யாணத்தையே உடனே நிறுத்தி விடுவானா!

இப்போது நிர்மலாவின் முறை. அவனைக் கேள்விகளால் துளைத்து தன் சந்தேகங்களை அவள் நிவர்த்திசெய்துகொள்ள வேண்டும்.

ஸார் உங்கள் அத்தை பெண் மஞ்சரியைத் தான் நீங்கள் மணக்க இருக்கிறீர்கள்? உங்கள் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் கூட நடந்து விட்டதாமே?

சத்யன் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு எவ்வித உணர்ச்சியுமில்லாமல் தலையசைத்ததும் நிர்மலாவுக்கு நெஞ்சில் இரும்புக் குண்டை வைத்து விட்டாற்போல் கனத்தது.

கல்யாணம் எப்போது ஸார்? என்றாள் அவள் விடாப்பிடியாய் குரல் கம்ம.

விரைவில்.... என்ற ஒற்றை வார்த்தையுடன், அதற்குமேல் பேச விரும்பாதவன் போல் சத்யன் திரும்பிக்கொண்டான்.

மறுபடியும் கார் கிளம்பியது.

விழியோரத்தில் துளிர்த்த நீர்த்துளிகள் அவனறியா வண்ணம்

துடைத்துக் கொண்டாள் நிர்மலா.

காதல் இல்லை.... என்று கூறி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தாயிற்று. இனி என்ன செய்யப் போகிறாள்?

சத்யன்எதற்கு அப்படிக் கேட்டான்? தன்னைக் காதலித்து ஏமாந்திருப்பானோ என்ற சந்தேகத்தில்தானோ!

காதலித்து ஏமாந்தாள்.... என்று தெரிந்தால் என்ன செய்யப் போகிறான்.

நிறுத்தப் போகிறானா? நிச்சயிக்கப்பட்ட கல்யாணத்தை அவனால் எப்படிட நிறுத்த முடியும்?

பின்....

ஆறுதல் சொல்லப் போகிறானா! என்னை மறந்து விடு. வேறு ஒரு நல்லவனாய் பார்த்து கல்யாணம் செய்து கொள் என அட்வைஸ் செய்வானா?

அவனது வாயிலிருந்து அப்படி ஆறுதல் வார்த்தைகளை கேட்பதற்குப் பதில் அவள் உயிரையே விட்டிருவாளே!

அதற்குப் பின் இருவருக்கும் இருந்த மனநிலையில் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. சத்யன் மறுபடியும் அவளை அலுவலகத்தில் விட்டு விட்டு வெளியே எங்கோ சென்று விட்டான். ஹைடெக் கம்யுனிகேஷன்ஸ் கட்டுமான விஷயம் என்றெல்லாம் சொல்லி அழைத்துப் போய் இதைக் கேட்பதற்காகத்தான் நாசூக்காய் கூட்டிப் போய் விசாரித்திருக்கிறான்!

பெரிய பரோபகார மகாராஜா! நம்மை தனியே கூட்டிப் போய் விசாரிக்கிறாராம். ஆறுதல் படுத்துகிறாராம்! இப்போது காட்டும் அக்கறையில் ஒரு பங்கையாவது முன்பு அவன் காட்டியிருந்தால்.... அவள் காதலை பற்றி தெரிந்து கொண்டிருப்பான் அல்லவா? காலம் கடந்த ஞானோதயம்! சே!

வெறுப்பும் எரிச்சலுமாய் அலுவலகத்திற்குள் நுழைந்தவளை மேலும் எரிச்சல் படுத்த தயாராய் நின்று கொண்டிருந்தாள் அவள்.

அவள்... மஞ்சரி!





# 10



ஸீட்டில் உட்காரப் போன நிர்மலாவை, மஞ்சரி மேடம், உங்களை வந்ததும் உடனே வரச் சொன்னார்கள்... என்று கவிதா சொன்னது திடுக்கிடத்தான் செய்தது.

மஞ்சரி மேடமா? எங்கிருக்கிறார்கள்? நிமிர்ந்து திகைப்பாய் பார்த்தவளுக்கு கவிதா விளக்கினாள்.

உங்களுக்குத் தெரியாதா? எம்.டி.ஸார். இல்லாதபோது சாரின் வீட்டில் மேடம் தான் உட்கார்ந்து நிர்வாகத்தைக் கவனிக்கிறார்கள். அவர்கள்தான் உங்களை வரச் சொன்னார்கள்!

ஓ.... இந்தக் கூத்து வேறு நடக்கிறதா? இரண்டு நாள் அவள் இல்லாதபோது முதலாளியம்மாவும் அப்பாயிண்ட் ஆகி விட்டார்களா?

அவள் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொரு பெண். இந்டதக் கன்றாவியை எல்லாம் அவள் பார்க்க வேண்டும் என்று விதி!

விதியை நொந்தபடி எம்.டி.ரூமை அடைந்து அறைக்கதவைத் திறந்தாள்

கவிதா சொன்னது சரி உள்ளே... முதலாளி தோரணையில் அலட்டலாய்த்தான் மஞ்சரி அமர்ந்திருந்தாள். அவளது சற்று பருமனான உடம்பிற்கு பொருந்தமில்லாமல் இறுக்கமான சுடிதாரை அணிந்திருந்தாள். தலையிலிருந்து ஒரு முடி கற்றையை எடுத்து அலட்சியமாய் நெற்றியில் புரள விட்டிருந்தாள். ஸ்டைலாம். அதற்குள் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்து விட்டாள் மஞ்சரி.

நிர்மலாவைப் பார்த்ததும் அவள் முகம் அஷ்டகோணலாய் மாறி கடுகடுப்பானது.

ஓ.... நீயா...! வந்து விட்டாயா.... என்ன திமிர் உனக்கு? என்றாள் எடுத்த எடுப்பில்.

அவளிடமிருந்து அப்படியொரு மரியாதைக்குறைவான கேள்வியை கொஞ்சமும் நிர்மலா எதிர்பார்க்கவில்லை. அவளையே கோபமாய் அவளும் உறுத்துப் பார்த்தாள்.

என்ன முழிக்கிறாய்! அன்று... ஞாபகமில்லை....? அவர் சத்யன் என்னை அறிமுகப்படுத்தும்போது.... கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல் தலைவலி என்று ஓடிவிட்டாயே?

அவள் சொன்னதும் தான் நிர்மலாவிற்கு அன்று அரக்கப் பறக்க ஓடியது நினைவுக்கு வந்தது. அதுதான் இவளுக்கு கோபமோ!

என்ன திகைக்கிறாய்? பதிடில் சொல்!

அ... அது... அது....

இந்த விளையாட்டெல்லாம் என்னிடம் வேண்டாம். நான் யார் என்று புரிகிறதா?

நீங்கள்.... நீங்கள்....

சத்டயனுடைய மனைவி. உன்னுடைய முதலாளி. அதை புரிந்து கொண்டு ஒழுங்காய் நடந்து கொள்... புரிகிறதா?

.......

நிர்காதே. போ.... போய் வேலையைப் பார்....! முடிவாய் ஒரு விரட்டு விரட்டி விட்டு ஓய்ந்தாள். மறுபடி மறுபடி எரிந்து விழும் அவளை ஆச்சரியத்துடன் பார்த்த நிர்மலாவிற்கு கோபம் வராமல் இல்லை. பீறிட்டுக் கிளம்பிய வார்த்தைகளை, உதடுகளை பற்களால் அழுத்திய நடுக்கத்துடன் நிறுத்தி விட்டாள்.

எய்தவன் இருக்க அம்மை நோவானேன்! என்ற அடைமொழி தான் அவளது ஞாபத்திற?கு வந்தது. இது எல்லாவற்றுக்கும் காரணம் சத்யன் தானே! அவன் தானே அத்தை பெண் என ஓடிப்போய் இவளை மணக்க இருக்கிறான். அதனால் தானே இவள் இந்த ஆட்டம் போடுகிறாள்?



கொண்ட கோபமெல்லாம் சத்யன் மீது திரும்ப விறுவிறுவென ரூமை விட்டு வெளிவந்து தனது ஸீட்டில் உட்கார்ந்தாள்.

வேலையில் அவளால் சுத்தமாய் கவனம் செலுத்த முடியவில்லை.

இன்னொரு விஷயமும் பூதாகரமாய் எழுந்து அவளை வாட்டியது. இனி அலுவலகத்தில்.... சத்யனும் மஞ்சரியும் தம்பதி சகிதமாய் வரப் போகிறார்கள்... அவர்கள் இருவரையும் கண்குளிர பார்த்தபடி அவள் வேலை பார்க்கப் போகிறாள்! அவளால் முடியுமா?அவள் மனம் என்ன எந்தவொரு உணர்ச்சியும் இல்லாத பாறாங்கல்லா? பேசாமல் வேலைய்ய ரிசைன் செய்தால்...?

அந் நினைப்பு இரவு படுக்கும்போது நிர்மலாவினுள் பலமாய் வலுப்பெற்றது. வேலையை ராஜினாமா செய்து விட்டால் தினம் சத்யனின் முகத்தில் விழிக்க வேண்டியிராது. அவள் மனமும் எந்தவொரு சலனப்படாது.

நிம்மதியாய் விதியை நொந்தபடி வாழ்க்கையை ஓட்டிவிடலாம்.

யோசித்தவள் முதலில் இந்த விஷயத்தை வீட்டில் சொல்லலாமா என்று நினைத்தாள். தந்தையும் தாயும் வீணாய் கலவரப்படுத்துவார்கள். வேலையை விட்டு விட்டு ஏதாவது சொல்லி அவர்களை சமாதானப்படுத்திக் கொள்ளலாம் என முடிவிற்கும் வந்தாள்.

மறுநாள் சத்யனின் ரூமில் நுழைந்து ரிஸைனிங் லெட்டரை நீட்டியபோது நிமிர்ந்து புதிராய் பார்த்தான் அவன்.

சார், நான்... நான்... வேலையிலிருந்து விலகிக்கொள்கிறேன் சார். நீங்கள் வேறு நல்ல அனுபவமுள்ள யாரிடமாவது இந்தப் பொறுப்பைக் கொடுங்கள் சார்... என்றாள் உயிரிழந்த குரலில்

அவள் முகத்தை சில கண நேரம் இமை கொட்டாமல் பார்த்த சத்யன், என்னாயிற்று உனக்க? என்றான்.

ஒன்றும் ஆகவில்லை.....

பின் எதற்கு ராஜினாமா செய்கிறாய்?

என்னால் முடியவில்லை சார். வேலைப்பளு அதிகமாக இருக்கிறது மேலும்...

சொல்....

எனக்கு திரும்பவும் படிக்க வேண்ம் என்ற ஆசை வந்து விட்டது... என்று பழைய குருடியாய் மேற்படிப்பு விஷயத்தை எடுத்து விட்டாள். படிப்பு என்று சொன்னால் சத்யனால் ஒன்றும் சொல்ல முடியாது. அவளது ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!

சத்யன் ஓரிரு நிமிடம் அமைதியாய் இருந்து விட்டு, முதலில் ஒரு விஷயத்தை தெளிவுப்படுத்திச் சொல். உன் ராஜினாமாவிற்கு வேலைப்பளு காரணமென்றால் வேலையைக் குறைத்துக் கொடுக்கிறேன். இல்லை மேற்படிப்புத்தான் படிக்க ஆசை என்றால் அதை முதலில் தெளிவுப்படுத்து.... என்றான்.

அவன் சொன்னதும் அவள் மேற்படிப்பு விஷயத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பில், நிஜம் தான் சார் எனக்கு மேல் படிப்பு ஆசை இப்போது அதிகமாவிட்டது. பெயருக்குப் பின்னால் மாஸ்டர் டிகிரியாய் எம்.ஆர்க் என்று போட்டுக் கொள்ள தவிப்பாய் இருக்கிறது. அதனால் தயவு செய்து எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று முடித்தாள்.

அவள் முடிக்கவும், அப்படியானால் நீ ராஜினமா செய்ய வேண்டிய-அவசியமில்லை.... என்றான் சத்யன் திடமான குரலில்.

எ.... என்ன.... என்ன சொல்கிறீர்கள் சார்?

அவள் கேள்விக்குப்ட பதில் சொல்லாமல் தனது மேஜையின் டிராயரைத் திறந்து கவர் ஒன்றை எடுத்துப் போட்டான் சத்யன். திகைப்பாய் பார்த்தவளிடம், இது பெங்களூர் யூனிவர்சிட்டியில் எம்.ஆர்க். படிப்பை தபால் மூலம் படிப்பதற்கான விண்ணப்ப பாரம். உனக்காக முன்னால் நான் வாங்கி வைத்திருந்தது. நீ தபால் மூலம் தாராளமாய்ப் படிக்கலாம். அதற்கான செலவு முழுவதையும் அலுவலகம் ஏற்றுக் கொள்ளும். மேலும் தினம் நீ படிப்பதற்காக



அலுவலக நேரத்தில் ஒரு மணி நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவும் உனக்க வசதி உண்டு. இப்போது புரிகிறதா? மேற்படிப்பிற்காக நீ ஒன்றும் ராஜினாமா செய்ய வேண்டியதில்லை....!

அவன் இப்படிச் சொல்வான் என்று நிர்மலா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சொன்னதும் வாயடைத்துப் போயிற்று. தன் மேலே கோபமும் வெறுப்பும் வந்தவளாய் அந்த விண்ணப்ப பாரத்தை எடுக்காமல் விறுவிறு வென ரூமை விட்டு வெளியே போனாள். அவள் போவதையே குறுஞ்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் சத்யன்.

அன்று மாலை நான்கு மணிவாக்கில் சத்யன் அலுவலகத்தை விட்டு கிளம்பினான். அவன் அகன்றதும் சொல்லிவைத்தாற்போல் அலுவலகத்திற்குள் அலட்டலாய் வந்து விட்டாள் மஞ்சரி.

வழக்கம்போல் சத்யனின் ரூமில் போய் உட்கார்ந்தவள் முதலில் வம்பிழுக்க நிர்மலாவைத்தான் கூப்பிட்டாள். நிர்மலா எந்தவொரு உணர்ச்சியுமில்லாமல்தான் அவள் முன் போய் நின்றாள்.

வணக்கம் மேடம், என்ன விஷயம்? என்றாள்.

என்னதான் நினைத்டதுக் கொண்டிருக்கிறாய் நீ? என்றாள் மஞ்சரி எடுத்து எடுப்பில் கண்களை உருட்டிய கோபத்துடன்.

அவள் திமிராய் ஒருமையில் விளித்த போதும் நிர்மலாவிற்கு ஏனோ கோபமோ எந்தவொரு உணர்ச்சியோ ஏற்படவில்லை. என்று சத்யன் தன்னை விரும்பவில்லை என்று தெரிந்ததோ... அன்றே அவள் செத்து விட்டாள் தானே!

என்ன விஷயம் மேடம்? மறுபடியும் பணிவுக்குரலில் கேட்டாள் நிர்மலா.

மஞ்சரிக்கு என்ன ஆசையோ.... அவளிடம் சண்டை போடாமல் விடமாட்டாள் போலிருந்தது.

உனக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாய் நீ? என்றாள் ஆத்திரமாய்.

அப்போதும் நிர்மலாவிற்கு கோபம் வரவில்லை. சுரீர் என உரைக்கவில்லை.

நீங்கள் எதற்காக கோபப்படுகிறீர்கள்? என்ன தவறு அப்படி நடந்து விட்டது? என்றாள் சாதாண குரலில்.

ஹைடெக் கம்யுனிகேஷன்ஸிற்கு நீ தானே உருவகமாடலை ஸ்கெட்சிங் செய்தாய்? அதில் ஏன் இவ்வளவு பெரிய வட்ட அமைப்பு ஏற்படுத்தியிருக்கிறாய்? பார்க்க அசிங்கமாய் இல்லை? என்றாள் மஞ்சரி கொதிப்போடு.

மஞ்சரி அந்த கட்டுமான வரைபடத்தை காட்டி கேட்டதும் நிர்மலாவிற்கு சிரிப்பு தான் வந்தது. அந்த வட்ட அமைப்பு ஹைடெக் கம்பெனி தனது பிராண்ட் முத்திரையை பொறிப்பதற்காக செய்யச் சொன்ன அமைப்பு. அவர்களே கேட்டு சொன்னது கூட புரியாமல்....?

மேடம், அது ஹைடெக் கம்பெனியினரே நம்மிடம் ஏற்படுத்தச் சொன்ன அமைப்பு அதனால் தான் படத்தில் குறிப்பிட்டிருக்கேன்.

அவர்க்ள சொன்னால் உடனே செய்து விடுவதா? என்னிடம் கேட்க வேண்டாம்? என்னுடைய அனுமதியை கேட்க வேண்டாமா?

மஞ்சரி வெடிக்க புத்திகெட்டு பேசும் அவளை விசித்திரமாய் பார்க்க ஆரம்பித்தாள் நிர்மலா. அது மஞ்சரிக்கு மேலும் ஆத்திரமூட்டியது.

என்ன பார்க்கிறாய்? இப்படியே போனால் உன் ஸீட்டைக் கிழித்து விடுவேன். உன்னை வேலையை விட்டுத் தூக்கி விடுவேன். புரிகிறதா?

மறுபடி மறுபடி மஞ்சரிஅந்த வார்த்தைகளைச் சொல்ல... நிர்மலாவிற்கு சட்டென உரைத்டதது. என்ன சொன்னாள்? வேலையை விட்டுத் தூக்கி விடுவாளா? ஸீட்டைக் கிழித்து விடுவாளா? இவளுக்கு கோபமூட்டினால் இவள் ஆவேசமாகி சத்யனிடம் சொல்வாள். சத்யனும் கிளிப்பிள்ளையாய் இவள் பேச்சைக் கேட்டு வேலையை விட்டு நீக்கி விடுவான். அவள்ஆசைப்பட்ட மாதிரி சத்யனின் முகத்டதிடில் விழிக்காமல் இருக்கலாம். வேலையை ராஜினாமா செய்து விட்டுப்போய் விடலாம். என்ன அருமையான வழி!



யோசித்துப் பார்த்த நிர்மலா சட்டென நிமிர்ந்தாள். முகத்தில் கடுமையையும் கோபத்தையும் வரவழைத்துக் கொண்டு மஞ்சரியை நோக்கி முறைப்புப் பார்வை பார்த்தாள்.

என்ன.... என்ன அப்படிப் பார்க்கிறாய்? நிர்மலாவின் திடீர் மாற்றத்தால் புரியாமல் அரண்டாள் மஞ்சரி.

முட்டாள் நான் அல்ல... நீ... நீங்கள்தான்....

என்னது நான் முட்டாளா?

ஆமாம். வடிகட்டிய முட்டாள் நீங்கள்...! உங்களுக்கு மூளை என்ற ஒன்று இருந்தாபல்தானே! அலுவலக அறிவோ, அனுபவ அறிவோ இல்லாத உங்களுக்கு இந்த ஆபீஸில் யாரையும் கேள்வி கேட்கும் அருகதையும் கிடையாது. அதனால் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருங்கள். புரிகிறதா?

நிர்மலா வேண்டுமென்றே கூட்டிச் சொன்ன வார்த்தைகளை அப்படியே உண்மை என்று நம்பி ஜிவுஜிவுத்து விட்டாள் மஞ்சரி. ஏய்... நில்லு... என்னை எதிர்த்தா பேசுகிறாய் உன்னை.... உன்னை....

பற்களைக் கடித்து தன்னை துவம்சம் செய்யத் துடித்தவளை மேலும் அலட்சியமாய்ப் பார்த்தாள் நிர்மலா.

என்னை உங்களால் ஒன்றம் செய்ய முடியாது. நான் சத்யனால் நேரிடையாய் அப்பாயின்ட் செய்யப்பட்டவள். உங்கள் குண்டு என்னிடம் செல்லாது. இனி ஒரு வார்த்தை நீங்கள் பேசினாலும் மரியாதை கெட்டு விடும்.

சொல்லிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் விறுவிறுவென ஸீட்டிற்கு வந்து விட்டாள் நிர்மலா. ரூமின் வாசலருகே வரும்போது, உன்னை டிஸ்மிஸ் செய்து விட்டுத்தான் எனக்கு மறுவேலை... என்று மஞ்சரி கத்தியது மட்டும் கேட்டது. எது எப்படியோ போட்ட நாடகத்டதிடிற்கு பலனாய் அவளை வேலையை விட்டுப் போகச் சொன்னால் போதும். அதுவே அவளுக்கு பெரும் நிம்மதிதான்..!

அவள் நினைத்தது போலவே மஞ்சரியோடு மோதிய விஷயம் பெரும் பூகம்பமாய் அலுவலகத்தில் வெடித்தது.

அவளை கூப்பிட்டனுப்பினான் சத்யன்

எந்தவித பயமுமில்லாமல் அவனது அறைக்கள் நுழைந்தாள் நிர்மலா. அங்க கடுகடுத்த முகத்துடன் அவளைத் தின்றுவிடத் துடிக்கும் மஞ்சரியும் நின்று கொண்டிருந்தாள்.

சத்யன் திரும்பி நேராய் அவளைப் பார்த்தான்.

நிர்மலா, நேற்று மஞ்சரியிடம் கோபமாய் பேசினாயா? அவளை முட்டாள் என்றாயா? என்றான்.

நிர்மலா அதை ஆமோதிக்கும் பாணியில் தலையசைத்தாள்.

அப்படியானால்.... அவளிடஅம் மன்னிப்புக்கேள்.... என்றான், சத்யன் உறுதியான குரலில்.



## 11



மஞ்சரியிடம் மன்னிப்புக் கேள்.... என்ற சத்யன் சொன்னது நிர்மலாவிற்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. சட்டென வெடித்து சிவந்த முகத்துடன் நிமிர்ந்தவள் அவனை முறைக்கவே செய்தாள்.

சத்யன் அவள் பக்கம் வந்து கனிவுப் பார்வை பார்த்தான்.

நிர்மலா, நான் ஒரு காரணத்திற்காகத்தான் சொல்கிறேன். நிலைமையைப் புரிந்து கொள். நீ விரும்பியபடி வேலையை விட்டு விடலாம். போதுமா? என்றான் மெல்லிய குரலில்.

நிர்மலா அவன் சொல்வது கண்டு புரியாமல் திகைக்கத்தான்



செய்தாள்.

ப்ளீஸ்... நிர்மலா.... எனக்காக...! உன் விருப்பத்தை நான் நிறைவேற்றி வைக்கிறேன்....! கெஞ்சும் குரலில் சத்யன் கேட்கவும் வேறு வழியில்லாதவளாய் மஞ்சரி பக்கம் திரும்பினாள்.

நான் அப்படிப் பேசியது தவறு தான். என்னை மன்னித்து விடுங்கள் என்றாள் சாதாரண குரலில்

நிர்மலா சொன்னாள். அவள் சொல்லும்போது மஞ்சரியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே? சந்தோஷத்தில் முகமே வெடித்து விடும்போல் இருந்தது.

ஆனால் அவளது சந்தோஷம் நீடிக்கவில்லை. சத்யன் அவள் பக்கம் திரும்பி கடுமையாய்ப் பார்த்தான்.

மஞ்சரி....

என்ன சத்யன்?

இனி நீ அலுவலகமத் வரத்தேவையில்லை. வீட்டிருந்தாலே போதும்....

மஞ்சரி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

என்ன.... சொல்கிறீர்கள் சத்யன். நான் அலுவலகத்திற்கு வரக்கூடாதா?

ஆமாம். நீ நம் திருமணம் முடிந்ததும் ஹவுஸ் ஒய்ஃப்பாகத்தான் இருக்கப் போகிறாய்? அதை இப்போதே ஆரம்பித்து விடு. இனி நீ ஆபீஸ் வர வேண்டாம். இது என் கட்டளை!

கணீர் குரலில் சத்யன் சொல்லவும் சப்தநாடி ஒடுங்கியது மஞ்சரிக்கு. கோபமும் அவமானமும் அடைந்தவளாய் விறுவிறுவென

அறைக்கதவை ஓங்கி சாத்தியபடி வெளியேறினாள் மஞ்சரி.

நிர்மலாவிற்கு ஏறக்குறைய அதே நிலைமை தான். கோபமும்ட வெறுப்புமான உணர்ச்சிகள் தான்.

அவள் வேலையை விட்டுப் போய்விடலாம் என்பது போல் சொல்லிவிட்டு, கடைசியில் மஞ்சரியை அல்லவா வேலையை விட்டுத் தூக்கி விட்டான்! அவள் திட்டம் போட்டு நடத்திய நாடகத்தை தலை கீழாய் மாற்றி விட்டானே!

அவள் மேலும் திகைப்படையும் வண்ணம் பக்கத்தில் வந்தவன், இனி மஞ்சரியை சாக்காய் வைத்து நீ வேலையை விட முடியாது.... என்று சொல்லவும் செய்தான்.

அதன் பின் வந்த இரண்டு நாடகளும் நிர்மலா யோசித்து, எனக்கு வேலை செய்ய இஷ்டமில்லை. நான் வேலைக்கு வரப்போவதில்லை. உங்களால் என்ன செய்ய முடியும்? என மிரட்டியும் பார்த்தாள். அதற்க சத்யனோ, இரண்டு வருடம் கண்டிப்பாக வேலை பார்ப்பதாய் அக்ரிமெண்டில் கையெழுத்து போட்டிருக்கிறாய். எந்தவொரு காரணமுமில்லாமல் நீ வேலையை விட்டு நின்றால் உன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்... என பதிலுக்கு மிரட்டவும் அந்தத் திட்டத்தையும் அவள் கைவிட வேண்டியதாயிற்ற.

மேலும்ஒரு சில நாட்கள் எந்தவித உற்சாகமின்றி வெறுமையுடன் கழிந்தது. அன்று வழக்கம் போல் கட்டுமான சைட் ஒன்றைக் காட்ட அவளைக் கூட்டிப்போன சத்யன் சைட்டில் இருந்து திரும்ப நேரமும் ஆகிவிட்டது. பக்கத்தில் சரியான ஹோட்டல் வசதி இல்லாததால் சாப்பிடவும் முடியவில்லை. அரை மணி நேரபயளணத்திற்குப் பின் நகருக்குள் நுழைந்ததும் காரை நேராய்



நட்சத்திர ஹோட்டல்ஒன்றை நோக்கி செலுத்தினான்.

நிர்மலா பிடிவாதமாய் மறுத்தும், இந்த மாதிரியான ஹோட்டலுக்கெல்லாம் நீ வந்திருக்க மாட்டாய். ஒரு முறை வந்து பார்! என உள்ளே அழைத்துச் சென்று விட்டான். அந்த நட்சத்திர ஹோட்டலின் நவீனமான வடிவமைப்பு மற்றும் வசதிகளைக் கண்டு நிர்மலா பிரமிக்கத்தான் செய்தாள்.

எல்லோருமே மேல் தட்டு மக்கள். எந்தவித கவலையுமின்றி ஜோடி ஜோடியாய் ஆணும் பெண்ணும் அலைவது அவளுக்குத் திகைப்பூட்டியது. அப்படிஅமவள் எல்லாவற்றையும் பட்டிக்காடு போல பிரமித்ததாலோ என்னவோ, ஹோட்டலின் பெரிய ஹாலைத் தாண்டிய குறுகிய பாதையில் சத்யன் அவ்வப்போது லேசாக உரசிக்கொண்டு சென்றதுகூட அவளுக்கு தப்பாக படவில்லை.

தப்பாய்ப் படுவது எதற்கு? அதில் ஒரு சுகமயக்கம் இருக்கத்தானே செய்தது!

அந்த சுகமயக்கம் தந்த தடுமாற்றமோ, என்னவோ நடந்து வந்தவள் கார்ப்பெட் விரிப்பின் விளிம்புப் பகுதியில் தடுக்கிக் கொண்ட தடுமாறி விழவும் போனாலள்.

சட்டென சத்யன் அவளைப் பிடித்தவன் அவளை கீழே விழாமல் தாங்கிக் கொண்டதோடு நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவனுக்கு தானாய் வந்த வாய்ப்பை விட மனம் இல்லை போலும். அப்படியே அவளை இழுத்து உடல் அழுந்த அணைத்து முத்தமிட்டான் அவன்.

திடீரென ஏற்பட்ட ஸ்பரிச மயக்கத்திடில் மறுக்க வேண்டும்என்கிற எண்ணம் கூட இல்லாமல் நிர்மலா நெகிழ்ந்துவிட, அந்தத்ட தழுவலும், இதழணைப்பும் எவ்வளவு நேரம் நீடித்தது

என்பதே அவளுக்குத் தெரியாது போயிற்று.

சட்டென தாண்டிச் சென்ற பேரர் ஒருவரின் கணைப்புச் சிரிப்பு சத்தத்தில் தான் இருவருக்கும் சுய உணர்வே வந்தது.

தான் நின்று கொண்டிருந் நிலையை உணர்ந்த நிர்மலா அப்படியே திகைத்து உறைந்து விட்டாள். இன்னொரு பெண்ணை மணக்கப் போகும் சத்யனின் அரவணைப்பில்அவள் அதுவும் காதலர்களால் முத்தமிட்டுக்கொண்ட.

ச்சீ.... என்ன இது...!

உமிழாத குறையாய் உறுமி சத்யனை நெட்டித் தள்ளி அவனிடமிருந்து விலகினாள்.

எப்படி இது நிகழ்ந்தது? இன்னொரு பெண்ணை கட்டிக் கொள்ள இருக்கிறவன் என்று தெரிந்தும் அவன் இறுக அணைத்து முத்தமிடும் வரை உணர்வற்று இருந்திருக்கிறாளே!

நடக்கக்கூடாதது நடந்து விட்டது போல் அவள் பெரியதுமு; கவலை கொள்ள, உன் அழகான முகத்தைச் சாய்த்து ஏன் இப்படி வருத்தப்படுகிறாய். ஒன்றும் தவறாக் நடக்கவில்லை கண்மணி! என்று சத்யன் சொல்லி அவளை மேலும் ஆத்திரப்படுத்தினான்.

இவன் என் இப்படிச் சொல்கிறான்? மஞ்சரியை மணக்கப் போகிறவனுக்கு திடீரென என்ன கரிசனம்? ஒருவேளை....ஒருவேளை... சத்யனுக்கு நம்மீது ஈடுபாடு வந்து விட்டதோ!

யோசித்தவளின் மனதில் விடிவெள்ளி போல் அந்த எண்ணமும் உதித்து ஒரு சிலமணி நேரம் அவளை ஆனனந்தடிப்படுத்தவும் செய்தது.






# 12



சத்யனுக்கு தன் மீது விருப்பம் வந்து விட்டதோ என்ற நிர்மலா மனதுள் நினைத்து மறுநாளே அவள் எண்ணம் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கும்படி கல்யாண பத்திரிக்கையை நீட்டினான் சத்யன்.

எனக்கும் மஞ்சரிக்கும் கல்யாணம் அடுத்த வாரம் புதன்கிழமை.



அவன் கொடுத்தபோது விரல் நடுங்க வாங்கத்தான் செய்தாள் நிர்மலா. திகைப்புடன் வெறித்தபடி அப்படியே நின்றும் விட்டாள். அவமானம்,. கோபம், வெறுப்பு எல்லாமாகக் கலந்துஐ அவள் முகம் கன்றிச் சிவந்தது. விழியோரம் தளும்பிவிட்ட நீர்த்துளிகளை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

இரண்டு நாளில்... என்னவெல்லாம் நினைத்து விட்டாள்? சத்யனைப் பற்றி என்னவெல்லாம் கற்பனை செய்து விட்டாள். எவ்வளவு பெரிய முட்டாள்தனம். கடைசியில் கல்யாணப் பத்திரிகையை கொடுத்து விட்டான்!

ஆனால்.... சத்யன் அவளின் மாற்றத்தை எதுவும் கவனியளாதவன் போல் கல்யாண ஏற்பாடுகள் பற்றி விவரிக்க ஆரம்பித்தான். நகரின் பெரிய கல்யாண மண்டவபம் ஒன்றில் கிராண்டான ஏற்பாடு அறுசுவை சமையல், நவீனமான இருக்கை வசதிகள் கொண்ட ஏ.சி. ஹால், மாலை இன்னிசைக் கச்சேரி என தடபுடலாய் நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அவள்தான் முன்நின்று பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவன் சொன்னபோது அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

கையில் கொள்ளிக் கட்டையை கொடுத்ததோடு மட்டுமில்லாமல் அதைக் கொண்ட தலையைச் சொரியவும் சொல்கிறானே!

நா... நான்... நான்.... பார்த்துக் கொள்ள வேண்டுமா? என்றாள் நிர்மலா திக்கித் திணறி ஏற்பட்ட அதிர்ச்சியில் நா வறண்டு குரலே அவளுக்கு போய் விட்டது.

நீ.... நீதான் அதற்கு ஏற்ற நபர். பொறுப்பாய் பார்த்துக்கொள்வாய். அதனால் உன்னிடம் ஒப்படைத்தேன். இதில்



உனக்கு சிரமமென்ன? எல்லா ஏற்பாடுகளையும் நம் மேனேஜர் சபேசன் பார்த்துக் கொள்வார். நீ சூபர்வைஸ் செய்தால் போதுமு;. சரிதானே? என்று சத்யன் அவள் பதிலுக்குக் காத்திராமல் சொல்லிவிட்டு அகல தொப்பென சீட்டில் விழுந்தாள் அவள்.

இப்படியொரு நிலையை அவள் சற்றும்எதிர்பார்க்கவில்லை. அவள் பயந்தபடியே சத்யனுக்கு கல்யாணம். மஞ்சரி அவனது மனைவி. மயக்கம் வரும் அளவுக்கு அதிர்ச்சி. தரையில் ஊன்றியிருந்த கால்கிளல் பிடிப்பே இல்லாமல் சுய நினைவே போய்விடும் போல் இருந்தது.

அதற்கு மேலும் இறுக்கிப் பிடித்த உணர்ச்சிகளை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அலுவலக மேஜையிலே குப்புறக் கவிழ்ந்து கண்ணீர் விட்டாள்.

அவள் நெஞ்சி விம்மி, முதுகு குலுங்க எவ்வளவு நேரம் அழுதிருப்பாளோ! நல்லவேளையாய் அலுவலகப் பேணியாளர்கள் யாரும் அங்கு வரவில்லை. அவளைக் கவனிக்கவும் இல்லை

கவனித்தது அவன் ஒருவன் மட்டும்தான்!

மீண்டும் தற்செயலாக அவளிடம் ஏதோ சொல்ல வந்த சத்யன் சட்டென அறை வாயிலிலேயே நின்று விட்டான். அவள் அபவதை ஒருவித ரசிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்



# 13



அடுத்து வந்தஇரண்டு நாட்களும் நிர்மலா பேய் பிடித்து ஆட்டடி மாதிரிதான் நடமாடினாள். அடிக்கடியாருக்கும் தெரியாமல் அழுவதும் துடைப்பதுமாய் இருந்த முகத்தை அவளுக்கே பார்க்க சகிக்க முடியவில்லை. வீட்டிலும் அவளது நிலைமை தெரியாமல், முதலாளி சத்யனுக்கு கல்யாணமா? நீதான் ஏற்பாடுகளை முன்னின்று கவனிக்க வேண்டுமா?நீ இதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டுமு;! என புளகாங்கிதம் அடைந்தார்கள்.

இதோ.... நாளை விடிந்தால் கல்யாணம். முந்தைய நாள் மேனேஜர் சபேசனின் வற்புறுத்தலின் பேரில் வேறு வழியில்லாமல் கல்யாண மண்டபத்தை பார்விடப் போனாள். சத்யன் சொன்னபடியே நகரின் பரும்மாண்ட மண்டபம். அழகு வேலைப்பாடுகள், ஜரிகைத் தோரனங்கள், சாண்டலியர் விளகுகள் என வேலைகளும் ஜரூராய் நடந்து கொண்டிருந்தது.

மணமேடையைப் பார்த்தவள் ஒரு கணம் மூச்சடைத்தது போல நின்றாள். நாளை இதே மேடையில் சத்யனுக்கும் மஞ்சரிக்கும் கல்யாணம். அவள் கண்முன்னால் சத்யன் இன்னொரு பெண்ணுக்கு தாலி கட்டுவதை கண்குளிர, ரசித்துப் பார்க்கப் போகிறாளா?

நாளை என்ன ஆனாலும், சரி அந்த நேரத்திடில்அவள் இருக்கக் கூடாது. எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடிவிட



வேண்டும். சத்யனின் முகத்திலேயே அதன்பின் விழிக்கக் கூடாது.

மனதுள் பலவாறு நினைத்து முடிவெடுத்டதவள் ஜடம் போல நடந்தாள். அன்று இரவு மறுபடியும் அவள் மண்டபத்திற்கு உணவு பரிமாறுவதில் ஏற்பட்ட சிக்கல் ஒன்றைத் தீர்க்க வரவேண்டியிருந்தது.

வந்தவள் அந்த உணவு பிரச்சனையை விசாரித்து னஉடனடியாக தீர்த்தும் வைத்தாள். இரவு சடங்கிற்காக சத்யனின் உறவினர்கள் நிறைய பேர் வந்திருந்னர். அவர்களை உபசரித்தபடி நடந்தாள். மண்டபம் முழுவதும் வண்ண வண்ண விளக்குகளால் உயிர் பெற்றிருந்தது.

முன்புறம் வந்தவள் மண்டப முகப்பில் தங்க நிற எழுத்துக்களில் மின்னிய சத்யன் வெட்ஸ் மஞ்சரி, போர்டைப் பார்த்ததுமு; சிலைபோல் நின்று விட்டாள். அந்தப் பலகையே எவ்வளவு நேரம் அவள் வெறித்து பித்து பிடித்தவள் போல் நின்றிருப்பாள் என அவளுக்கே தெரியாது.

திடீரென தோளை ஒரு கரம் அழுத்தியபோது திடுக்கிட்டுத் திரும்பினாள்

எதிரே.... சத்யன்!

அந்த நேரத்தில் அவளை சற்றும் எதிர்பார்க்காததால் பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

என்ன பார்த்தாயிற்றா? சத்யன் வெட்ஸ் மஞ்சரி போர்டு எப்படி இருக்கிறது? நன்றாய் இருக்கிறதா? என்றான் அவன்.

ந.... நன்றாய் ...... இருக்கிறது. திக்கித் திணறித்தான் பதில் சொன்னாள் நிர்மலா. பேசும் சக்தியே அத்தோடு போய்விடும் போல் தான் அவளுக்குத் தோன்றியது.

அவளையே ஓரிரு நொடிகள் உற்றுப் பார்த்தவன் மெல்ல அவள் காதுப் பக்கம் குனிந்தான். நிர்மலா, அந்த போர்டில் சத்யன் வெட்ஸ் மஞ்சரிக்கும் பதில் சத்யன் வெட்ஸ் நிர்மலா என்றிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? என்று சொன்னதும் கொஞ்ச நஞ்சம் கேட்டுக் கொண்டிருந்த அவளது காதும் செவிடாய்த்தான் போனது.

அவளை செவிடாக்கிவிட்டு குறுஞ்சிரிப்புடன் விறுவிறுவென நடந்தான் சத்யன்.



## 14

கல்யாண நாள், சத்யனுக்கும் மஞ்சரிக்கும் கல்யாணம்!

முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்க... கல்யாண மண்டபத்தை அதிர்ச்சியாய் அந்தச் செய்தி தாக்கியது. மண்டபம் முழுவதும் பெரும் பரபரப்பு!

நிஜமா? உண்மையா...? இப்படி நடக்குமா? என்னாயிற்று. அந்தப் பொண்ணுக்கு? பாவம் 'சத்யன்...! அவன் திருமணத்தில் இப்படிப் போய் நடந்து விட்டதே!

ஆள் ஆளுக்கு உச் கொட்டினார்கள். வாய் பிளந்து அதிசயித்தார்கள்.

விஷயம் இதுதான்.



மணப்பெண் மஞ்சரி ஓடிவிட்டாள்! கல்யாணத்தில் அவளுக்கு இஷ்டமில்லையாம். காதலித்தவனோடு சென்று விட்டாளாம். இனி அவளைத் தேட வேண்டி அவசியமில்லையாம்.

அவளது ரூமிலிருந்து அவள் கைப்பட எழுதிவைத்திருந்த லெட்டர் மூலம் எல்லோருக்கும் விஷயம் பரவியது.

செய்தியைக் கேட்டு குற்றுயிரும் குலையுயிருமாய் நொந்து கடந்த நிர்மலாவும் அதிரத்தான் செய்தாள்.

அதைவிட அதிர்ச்சியாய் எங்கிருந்தோ தோன்றிய சத்யன் விறுவிறுவென அவளை நோக்கி வந்தான். திடமற்று கீழே விழும் நிலையிலிருந்த அவளை பூக்குவியில் போல அள்ளி எதிரில் இருந்த தனியறைக்கு தூக்கிச் சென்றான்.

தனியறையில், இருக்கையில் அவளை அமர்த்தி ஆசுவாசப்படுத்தியவன் நேருக்கு நேராய் பார்த்தான்

இனி உன் கழுத்தில் தான் தாலி கட்டப் போகிறேன். உனக்கு சம்மதம் தானே? என்றான்.

அதற்குப் பின் என்ன நடந்தது. என்ன நடக்கப் போகிறது என்பதையெல்லாம் நிர்மலா அறிய முடியவில்லை. அங்கு நடப்பதை உணர முடியாத வேகத்தில் விஷயங்கள் நடந்தது.

நிர்மலாவின் தாய் தந்தையரிடம் அனுமதி வாங்கி அதே மண்டபத்தில் அதே மணமேடையில் பெரியவர்க்ள வாழ்த்தொலிகளுக்கு நடுவே அவள் கழுத்தில் மாங்கல்யத்தை கட்டினான் சத்யன்.

கழுத்தில் ஏறிய மஞ்சள் சரடை நம்ப முடியாமல் அடிக்கடி தொட்டுப் பார்த்தாள் நிர்மலா. அந்த திகைப்பும் ஆச்சரியமும் இரவு

வரை நீடித்தது.

இரவு பால் சொம்புடன் தயக்கமாய் நுழைந்தவளை ஒரே எட்டல் அணுகி உடல் அழுந்த அணைத்து இறுக்கமாய்முத்தமிட்டான் சத்யன்.

அந்த இதமான நெருக்கத்தில் நெகிழ்ந்து போய் நிமிர்ந்தவளிடம், உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஆனால், இது எல்லாமே நான் நடத்திய திட்டம் தான். மஞ்சரியை ஓட வைத்ததும் நான்தான்! என்று அவன் சொன்னபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

என்ன நீங்களா? என்று பதறியவளை மீண்டும் அணைத்து மென்மையாய் முத்தமிட்டவன், உனக்கு எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்தே விளக்ககிறேன். அப்போதுதான் புரியும்.... என கதைபோல் சொல்ல ஆரம்பித்தான்.

நிர்மலா, எனக்கும் மஞ்சரிக்கும் இடையே எவ்வித ஈடுபாடோ, காதல்போன்ற மயக்கமோ,எப்போதும் இருந்தது கிடையாது. பெரியவர்கள் சொந்தத்தில் பேசி, சொந்தம் விட்டுப் போகாமல் இருக்கச் செய்த காரியம் என்றதால் நிச்சயதார்த்தமும்நடந்தது. நானும் இதை பெரிதாய் நினைக்கவில்லை. கற்பனை செய்யவவும் இல்லை. ஆனால், மஞ்சரி எனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் என உனக்கு நான் அறிமுகப்படுத்தியபோது உனது முகம் போன போக்கு என்னை சிந்திக்க வைத்து விட்டது. நீ என்னை விரும்புகிறாய். என் மீது தீராத காதல் கொண்டிருக்கிறாய் என அக்கணமே எல்லாவற்றையும் நலான் உணர்ந்து கொண்டேன்....

சொல்லிய சத்யன் நிறுத்திவிட்டுப் பார்க்க...குங்குமமாய்




சிவந்த முகத்தை அப்படியே கைககளில் புதைத்துக் கொண்டாள் அவள். சத்யனோ விடாது அவளது முகத்தை நிமிர்த்தி தனது இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு, பின் ஏன் என்னிடம் காதலே இல்லை என்று மறுத்தாய்? என எதிர் கேள்வி கேட்கவும், அது... அது...என திணறியவள்,எப்படிமுடியும் அது? நீங்கள் மஞ்சரியை மணக்க இருப்பதாய் சொல்லும்போது... வேப்பங்காயை கடித்த கையுடன் காதலைச் சொல்வதாவது.... என சிணுங்கினாள்.

அவள் சிணுங்கலை வெகுவாய் ரசித்தவன், நீ சொல்வது சரி. மஞ்சரி வேப்பங்காய்தான். ஆனால், நீ அத்திப் பழமாயிற்றே! அதனாலே நீ என் மீது காதல் வைத்திருப்பது தெரிந்ததுமு; என்னையறியாமல் மனது கிடந்து துடிக்க ஆரம்பித்து விட்டது. ரோமன்ஸ்லுக் என்பார்களே அது அதற்குப் பின்தான் என்னிடம் முழுமையாய் வந்து மன்மத பாணத்தை உன் மீது வீசலானேன்..... என்றபோது பொங்கும்சிரிப்பை அடக்க நிர்மலா சிரமப்பட வேண்டியதாயிற்று.

சிரிக்காதே. மூன்று மாதங்கள் உன் காதலை அறிய முடியாத நான் மூன்றே நிமிடங்களில் அதை உணர்ந்தது தான் ஆச்சரியம். அதனாலே விடாய் பிடியாய் உன்னைத் துரத்தி நீ இரண்டு நாள் லீவு போட்டதற்கு விளக்கம் கேட்டேன். நீயும் உண்மையைச் சொல்லாமல் தோழி, போதைப் பழக்கம், தற்கொலை செய்து கொண்டாள் என்றெல்லாம் கதை விட்டாய். அது பொய்யென்று மறுநாளே என் போலீஸ் நன்பரை விசாரித்து கண்டுபிடித்து விட்டேன். நீ குறிப்பிட்ட அந்த வாரத்தில் நகரில் தற்கொலையே நடக்கவில்லையென அவர் அடித்துச் சொல்லி விட்டார். அதன் பின் என் காதல் இன்னும் ஸ்ட்ராங்காயிற்று.

அவன் சொல்லச் சொல்ல அவள் அதிசயித்து மருண்ட

விழிகளை விரித்துப் பார்க்க, அவளது அந்த மைவிழி அழகையும் ரசித்துப் பார்த்தவன், நிர்மலா, நான் உன்னை அதன் பிறகு எத்தனை தரம் பார்த்து வியந்திருக்கிறேன் தெரியுமா? இவ்வளவு அழகையும், கடவுள் இந் ஐந்து அடி ஆறு அங்குலமேயான உடம்புக்குள் எப்படித்தான் திணித்தாரோ என்று எத்தனை தடவை ஆச்சரியப்பட்டு ரசித்திருக்கிறேன், தெரியுமா? என அவன் வியப்பாய் சொல்லவும் நிர்மலா சிரித்தவள், நான் உங்களை ரசித்தவை விடவா?என சொல்லிவிட்டு அவசரமாய் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.




**தேவையான பொருட்கள்:** பால் – 1 லிட்டர், பச்சரிசி – 1 குழிக் கரண்டி, சர்க்கரை – அரை கப்.

**செய்முறை:** பச்சரிசியை ஊற வைத்து மையாக அரைக்கவும். குழித் தட்டு ஒன்றில் கால் அங்குல கனத்துக்கு மாவை ஊற்றி, ஆவியில் 10 நிமிடங்கள் வேக வைக்கவும். இதை சிறு துண்டுகளாக்கவும்.

அடி கனமான வாணலியில், துண்டுகளாக்கிய அடையை ஒரு கப் தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். பாலை சிறிது சிறிதாக சேர்த்து கொதிக்க விடவும். வெந்ததும் சர்க்கரை சேர்த்து 2 நிமிடங்கள் கொதித்ததும் அடுப்பை அணைக்கவும்.

**குறிப்பு:** இது கேரளா ஸ்பெஷல் பாயசம். பாலுக்குப் பதில் தேங்காய்ப் பால் சேர்த்தும் செய்யலாம். அடைகளை தயார் செய்து, வெயிலில் காய வைத்து எடுத்து, தேவையானபோது உபயோகிக்கலாம்.

**குறிப்பு:** கேரளாவில் மிகப் பிரபலமான அயிட்டம் இது!



நீ என்னை ரசித்த கதையை கொஞ்சம் சொல்கிறாயா? என அவன் கெஞ்சவும் விஷயத்திற்கு வந்தாள் அவள்.

முதலில் இன்று நடந்ததைச் சொல்லுங்கள். மஞ்சரி, ஏன் ஓடிப்போக வேண்டும்? அதற்கு நீங்கள் காரணமென்று சொன்னீர்களே? என்றாள்.

ஓ.... சொல்கிறேன், நிர்மலா, மஞ்சரி என்னிடம் விரும்பியது எல்லாம் என்னுடைய பணத்தைத்தான். கோடிக்கணக்கான மதிப்புள்ள என்னுடைய சொத்தைதான்! எனக்குத் தெரியாமல் நம்முடைய கம்பெனி ஆடிட்டரைக் கூப்பிட்டு ரகசியமாய் என்னுடைய சொத்து மதிப்புகளைக் கணக்கெடுத்திருக்கிறாள். அவள் அப்படி விசாரித்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. கல்லூரி காலத்தில் அவளுடன் படித்த மனோகர் என்பவனுடன் அவளுக்குத் தொடர்பு இருந்தது. சொல்லப் போனால், அவளது உண்மையான காதலனும் அவன்தான்! என்னைக் கல்யாணம் செய்து என் சொத்து முழுவதையும் அபகரித்துவிட்டு காதலனோடு ஓடுவது அவள் திட்டமுமு; கூட, அவள் விசாரித்ததால், சந்தேகப்பட்டு நான் அவளை விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் இவை.

இதை உறுதிப்படுத்திக் கொண்டதும் நான் துடித்துப் போய் விட்டேன். இப்படி ஒரு பெண்ணையா என் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறோம்என்று தவித்தேன். அந்த நேரம் தான் நீ என்மீது வைத்திருக்கும் காதல் தெரியவர உன்னுடைய உண்மையான காதலில் என்னுடைய மனம் மயங்கி உடனடியாய் காதலிக்கவும் ஆரம்பித்து விட்டது

நீ மறுத்தாலும் உள்ளுக்குள் நீ என்னை நித்து காதலில் மருகுவதை பல சம்பவங்கள் மூலம் உறுதிப் படுத்திக் கொண்டு மஞ்சரிக்கும் எனக்குமான திருமண ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தேன்.

சத்யன் சொன்னவன் ஒரு நிமிடம் நிறுத்த, அதான் எதற்கு?


(கதை தொடர்ச்சி..81ம் பக்கம்)

## பாட்டி வைத்தியம்

வாதநாராயணன் கீரை ஒரு கைப்பீடி அளவு எடுத்துக் கொள்ளவும். இத்துடன் 3 பல் பூண்டு. சுண்டைக்காய், பெருங்காயம், விளக்கெண்ணெய் சேர்த்து வதக்கி அரைத்து சாப்பிட்டால் முடக்கு வாதம் மற்றும் விரைவாதம் குணமமாகும்.

வாதநாராயணன் கீரை உலர வைத்து அத்துடன் அரிசித்தவிடு. புறா எச்சம் இரண்டையும் சேர்த்து வறுத்து துணியில் கட்டி வைத்து ஒத்தடம் கொடுத்தால் பக்கவாதம் குணமாகும்.

வேளைக் கீரை,வாதநாராயணன் கீரை,பூண்டு,மிளகு,மஞ்சள் ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து நெல்லிக்காய் அளவு சாப்பிட்டால் வாத நோய்கள் தீரும்.

வல்லாரைக் கீரைச் சாற்றில் பூனைக்காலி விதைப் பருப்பை ஊற வைத்துக் காய வைத்துப் பொடியாக்கி, சம அளவு மிளகுத் தூள் சேர்த்து காலை, மதியம் இருவேளையும் சாப்பிட்டு வந்தால் காக்காய் வலிப்பு மற்றும் முடக்குவாதம். கை, கால் வாதம் ஆகியவை குணமாக்கும்.

லவங்கப் பட்டையுடன் வேப்பிலை, மிளகு, இரண்டையும் சம அளவு எடுத்து, அரைத்து காலையில் இரண்டு கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் கரையும்

ருத்திராட்சப் பொடி 100 கிராம், முத்துச்சிப்பி பஸ்பம் 100 கிராம்இரண்டையும் ஒன்றாகக் கலந்து தொடர்ந்து 96 நாட்களுக்கு காலை, மாலை இரு வேளையும் அரை கிராம் அளவுக்கு சாப்பிட வேண்டும். முடக்குவாதம் மற்றும் நரம்பு வாதம் குணமாகும்.



பின்னர் அந்தக் குழந்தை வகுப்பு அறைச் சூழ்நிலைக்குப் பழக நீண்டகாலம் ஆனது. தினமும் ஒரு ரோஜாமலர் வாங்கிக் கொடுத்து வகுப்பு ஆசிரியையிடம் தரச்சொல்லி ஆசிரியையின் வெறுப்பு பார்வையில் இருந்து குழந்தையை காக்க பெற்றோர் படாதபாடு பட்டார்கள்.

அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுப்பது. கேட்ட பொருளை எல்லாம் வாங்கிக் கொடுப்பது, பிடிவாத குணம், முரட்டுத்தனம் இவற்றை ஊக்குவிப்பது தங்கள் கோபதாபங்களுக்கு குழந்தைகள் பாதிக்கிறார்கள். இதெல்லாம் சில பெற்றோர் அறிந்தோ அறியாமலோ செய்யும் பிழைகள். குழந்தைகள் சுறுசுறுப்புடன் பலவற்றை கற்றுக்கொள்ளும் இப்பருவத்தில் குழந்தைகளின் மனநிலையை சரியான நிலையல் செலுத்துவது பெற்றோர் கடமை.

எனக்குப் புரியவில்லை என புருவம் உயர வியந்தாள் நிர்மலா. வியந்தவளை இழுத்து தன் கழுத்தோடு மாலையாக்கி நெற்றியில் சின்னதாய் முத்தமிட்டவன், சொல்கிறேன், கண்மணி, இந்த திருமண ஏற்பாடு முழுவதும் உன்னை மனதில் வைத்து நான் செய்தது தான். கடைசியில் மஞ்சரி இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுவாள் என்பதும் எனக்குத் தெரியும். அதற்கான வழியையும் நான்தானே செய்தேன் என்று அவன் நிறுத்தவும், என்ன வழி என்று பரபரத்தாள் நிர்மலா.

அது வேறு ஒன்றுமல்ல. எந்த ஆடிட்டரை மஞ்சரி விசாரித்தாளோ,அந்த ஆடிட்டரை வைத்தே பொய் புளுக வைத்தேன். எனது கம்பெனியில் கட்டுமான பணியில் பெரும்நஷ்டம் ஏற்பட்டு, நான் பெரும் கடனாளி ஆகி விட்டதாகவும், கோர்ட்டில் யாராவது வழக்குப் போட்டால் என் சொத்து முழுவதும் திவாலாகி நான் தெருவில் நிற்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என ஆடிட்டர் மூலம் பொய் சொன்னேன்.

எனக்காக ஆடிட்டர் சொன்ன பொய்யை மஞ்சரி நம்புயம் விட்டாள். இனி எதற்கு என்னைக் கட்டிக் கொள்ள வேண்டும்? என தன் காதலனோடு ஓடியும் போய் விட்டாள். இதுதான் நடந்த கதை...

பெரும் கதையாய் சொல்லி முடித்த சத்யன் நிறுத்தினான். இப்போது புரிகிறதா? எல்லா விஷயமும் விளங்கி விட்டதா? என்றான்.

நிர்மலா அப்படியே அவனது நெஞ்சில் புதைந்து ஆனாலும் மஞ்சரியுடன் கல்யாணம்அது.... இது... வென என்னை பாடாய்ப்படுத்தி விட்டீர்கள்..... என சிணுங்கவும், அவளை இறுக்கி மார்புறத் தழுவியவன் அந்தக் காயங்களுக்கெல்லாம் மருந்திடத்தானே இப்போது வந்திருக்கிறேன்..... என்றபடி அவளது மெல்லிய இதழ்களோடு தன் இதழ்களைப் பொருத்தினான்.

அவனது அணைப்பில் கட்டுண்டு, தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் நிர்மலா.

(முற்றும்)


**நந்தினி** மாத நாவல்

மலர் : 1 இதழ் : 10

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.சித்ரா**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035.